# மித்ரா டைம்ஸ்

MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

Tamil & English Monthly

ஆண்டு–4 | இதழ்–9 | பிப்ரவரி – 2019 | விலை ரூ.20/– | ஆண்டு சந்தா ரூ.240/–

Volume - 4 | Issue - 9 | February - 2019 | Price Rs.20/- | Annual Subscription Rs.240/-




பல்சுவை மாத இதழ்

**தமிழகத்தை குறிவைக்கும் பா.ஜ.க!**

- ஆசிரியர் கடிதம்

**பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பாக்குமட்டைத் தட்டுகள்**

**பலன்தரும் பரிகாரத் தலங்கள்**

## கடமை உணர்வு கொண்ட காவலர்

மத்திய கிரைம் - பிராஞ்ச் துணை கமிஷனர் செல்வகுமார்

BUSINESS WITHOUT INVESTMENT....

Join us for

Matrimonial

Webdesigns

Advertising

Rubber Stamps

Service Agencies



Call: 97500 57678

98438 47345

www.telescopetechnologies.in

சம்பாதிக்கலாம் வாங்க....!

# உள்ளே...




தொழில்துறையில் சாதனை படைக்கும் தமிழ்ப் பெண் 7

இந்திரா கிருஷ்ணமூர்த்தி நூயி



44 காவல்

கடமை உணர்வு கொண்ட காவலர்



36 Robotic Knee Replacement Surgery Performed



40 படபிடிப்பை அசரவைத்த 'தங்க' மகன் சூர்யா



20 பலன்தரும் பரிகாரத் தலங்கள்



31 உயிர் காக்கும் சிகிச்சை டயாலசிஸ்



4 தமிழகத்தை குறிவைக்கும் பா.ஜ.க அரசியல் எடுபடுமா?



29 நில விற்பனையில் அரசு வருவாய் உயர்வு! நிலவணிகத்துறை மீள் எழுச்சி பெறும் அறிகுறி!



# தமிழகத்தை குறிவைக்கும் பா.ஜ.க அரசியல் எடுபடுமா?

ஆசிரியர் கடிதம்

இந்திய பாராளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. இந்நிலையில் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி, எதிர்க்கட்சியான காங்கிரஸ் மட்டுமன்றி மாநிலங்களில் பெரும் செல்வாக்கு படைத்த கட்சிகளும் தேர்தலை எதிர்கொள்ளத் தங்களை தயார்படுத்தி வருகின்றன. நிலைமை இப்படியிருக்க, ஆட்சியைத் தக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் காலத்தில் பாரதிய ஜனதா அமைத்த கூட்டணி முயற்சிகள் பற்றியெல்லாம் பிரதமர் மோடி பேசத் தொடங்கியிருக்கிறார். எனவே, மாநிலங்கள்தோறும் சென்று கூட்டங்களில் கலந்துகொண்டு பேசும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். அதிலும் குறிப்பாக கடந்த தேர்தலில் தோல்வியடைந்த இடங்களைக் கண்டறிந்து அந்தத் தொகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அந்த தொகுதிகள் அனைத்தையும் பாரதிய ஜனதாவுக்கு சாதகமாகத் திருப்ப திட்டமிட்டு பா.ஜ.க செயலாற்றி வருகிறது. மேலும், நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள், பட்டியல் இனத்தவர், பெண்களின் ஆதரவைத் திரட்டவும் பா.ஜ.க முடிவு செய்துள்ளது.


என் எண்ணம்

அரசு திட்டங்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சிகளிலும் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசுவார் என்று சொல்லப்பட்டது. அதன்படி, மதுரை தோப்பூர் பகுதியில், 262 ஏக்கர் பரப்பளவில், 1264 கோடி ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேமேடையில், தலா ரூ.150 கோடி மதிப்பில் மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகளையும் காணொளி காட்சி மூலம் பிரதமர் திறந்து வைத்தார். ஆக, பாரதிய ஜனதா கட்சி தமிழகத்தைக் குறிவைத்து பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியும் வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, தமிழகத்தின் மயிலாடுதுறை, பெரம்பலூர், சிவகங்கை, தேனி, விருதுநகர் மக்களவை தொகுதி பா.ஜ.க வாக்குச்சாவடி முகவர்களுடன் டெல்லியில் இருந்தபடி காணொளிக் காட்சி மூலம் மோடி கலந்துரையாடினார். மேலும், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கட்சி நிர்வாகிகளுடன் காணொளிக் காட்சி மூலம் மோடி பேசும்போது, பாரதிய ஜனதாவின் நான்கரை வருட ஆட்சிக் காலத்தில் ஒரு கோடியே 25 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் மட்டும் 4 லட்சத்து 30 ஆயிரம்

வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேநேரத்தில். சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் காணொளிக் காட்சி மூலம் கட்சி நிர்வாகிகளுடன் மோடி பேசினார். பா.ஜ.கவின் நான்கரை வருட ஆட்சிக் காலத்தில் ஒரு கோடியே 25 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் மட்டும் 4 லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் மோடி தெரிவித்தார்.




`முதன்முறையாக வாக்களிக்க இருக்கும் இளைஞர்களுக்கு பரம்பரை ஆட்சியிலோ, வாக்குறுதி அளிப்பதிலோ விருப்பம் இல்லை. நாட்டின் வளர்ச்சியிலும், செயல்திறனிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். தேர்தலுக்காக வெற்று வாக்குறுதிகளை கொடுத்து இன்றைய இளம் தலைமுறையினரை யாரும் ஏமாற்ற முடியாது. சிறு குறு தொழில்களின் முன்னேற்றமே நமது முக்கிய இலக்கு' என்றும் மோடி அப்போது குறிப்பிட்டார்.

சமீபத்தில் வெளியான பல்வேறு கருத்து கணிப்புகளும், வரும் தேர்தலில் பா.ஜ.க கடந்த தேர்தலைப் போல அறுதிப்பெரும்பான்மை பிடிக்க முடியாது என்று கூறப்பட்டாலும் வட இந்தியாவில் கணிசமாக வெற்றி பெறுவதன் மூலமாக, தனிப்பெரும் கட்சியாக பாஜக உருவெடுக்கும் என்றும், ஆனால் ஆட்சி அமைப்பதற்கு பிற கட்சிகளின் கூட்டணி அவசியம் என்றும் அந்த கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில்தான் கூட்டணி குறித்து மோடி, பேச ஆரம்பித்திருப்பது முக்கியத்துவம் பெறுகிறது. அ.தி.மு.கவில் உள்ள சில தலைவர்கள், பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைக்க எதிர்ப்பு தெரிவித்து வருவதாகக் கூறப்படுகிறது. அக்கட்சியில் இருந்து சாதகமான பதில்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றாலும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தை அ.தி.மு.க.வுடன் இணைத்து அவர்களது பலத்தைக் கூட்டி கூட்டணி குறித்து பேச திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

பாரதிய ஜனதா தலைவர் அமித் ஷா, மாநிலம்தோறும் சக்தி கேந்திர காரியகர்த்தாக்காள் எனப்படும் வாக்குச்சாவடி ஊழியர்களைச் சந்தித்து, தேர்தல் பணிகள் குறித்துப் பேசி வருகிறார். அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள சக்தி கேந்திரப் பொறுப்பாளர்களைச் சந்தித்தபோது, கடந்த நான்காண்டு கால பா.ஜ.க. ஆட்சியில்தான் தமிழகத்துக்காக மத்திய அரசிலிருந்து அதிக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதாகக் கூறினார். முதலாவதாக, தேசிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் கீழ் 13வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி தமிழகத்துக்கு 94 ஆயிரத்து 540 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால், பா.ஜ.க. ஆட்சியில் 14வது நிதி ஆணையத்தின் கீழ் 1 லட்சத்து 96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்படி பல்வேறு வகைகளில் பாரதிய ஜனதா கட்சி தமிழகத்தைக் குறிவைத்து பல்வேறு தகவல்களைச்



சொல்லிவருவதுடன் பல்வேறு பணிகளையும் செய்துவருகிறது. சிறிய கட்சிகளில் தொடங்கி பெரிய கட்சிகள் வரை யாருடன் கூட்டணி அமைக்கலாம் என்பதுகுறித்து சிந்திக்குமாறு தமிழக பாரதிய ஜனதா தலைவர்களை முடுக்கிவிட்டிருக்கிறது.

இந்நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவுக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக பாரதிய ஜனதா தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் நன்றி தெரிவித்ததுடன், பிரதமரின் வருகை தமிழக பாரதிய ஜனதா தொண்டர்களுக்கு புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளிப்பதாகக் கூறினார்.

அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளில் பொருளாதாரரீதியாக பின்தங்கிய உயர் சாதியினருக்கு 10 சதவிகித இடஒதுக்கீடு வழங்க வகைசெய்யும் அரசியல் சட்டதிருத்த மசோதாவை மத்திய அரசு தயாரித்தது. மாநிலங்களவை மற்றும் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட அந்த மசோதா ஜனாதிபதி ஒப்புதலுடன் சட்டமானது. ஆனால், இந்த மசோதாவுக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் தி.மு.க உள்பட பல்வேறு கட்சிகள் எதிர்ப்புக் குரல் கொடுத்து வருகின்றன.இந்நிலையில், பாரதிய ஜனதா மத்தியில் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் தமிழகத்தை தொடர்ந்து வஞ்சித்து வருவதாக பல்வேறு தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது. குறிப்பாக ஹைட்ரோ கார்பன், ஸ்டெர்லைட், கெயில், நியூட்ரினோ போன்ற தமிழகத்துக்கு எதிரான திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஏற்கெனவே காவிரி நீர் மற்றும் மேகதாது அணை விவகாரத்தில் மத்திய அரசு மவுனம் சாதித்து வருவதற்கும் பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கஜா புயல் பாதித்த பகுதிகளை பிரதமர் மோடி பார்வையிட வரவில்லை என்று அனைத்து தரப்பு மக்களும் கடும் கோபத்தில் உள்ளனர். அதேவேளையில் போதுமான அளவு புயல் நிவாரணத்தொகை வழங்கவில்லை என்று ஆளும் அ.தி.மு.க உள்பட அனைத்துக் கட்சிகளும் பிரதமரை விமர்சித்து வருகின்றன. இதுபோன்ற சூழலில் தமிழகத்தில் பாரதிய ஜனதா காலூன்ற நினைப்பது கேள்விக்குறியே.


# மித்ரா டைம்ஸ்

மித்ரா 4 ஜனவரி 2019 டைம்ஸ் 8

அச்சிட்டு வெளியிடுபவர்-ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
**மணவூர் கி.விடாரண்யம்** பி.ஏ., பி.ஜி.எல்.,
9789837069 / 6379283750

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
R. **குணசேகர்**
S. **நாகராஜ்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

செய்தி இணை ஆசிரியர்
N. **ரமேஷ்குமார்**

ஊடக மேலாளர்
**திருமதி. சசிகலா சுதர்சனன்**
**செல் : 97910 96414**

செய்தியாளர்கள்
N. **மணிவன்னன் (நாகை)**
**மோகன்ராஜ் (காஞ்சிபுரம்)**
S. **முத்துராஜ் (கோவை)**

இணையதள செய்தியாளர்கள்
S. **சுருதிலட்சுமி** (B.Sc.,)

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

வடிவமைப்பு
**தங்கம் கிராபிக்ஸ், சென்னை 35**

விளம்பரம், சந்தா தொடர்புக்கு
திருமதி. **நிரோஷாதிலிப்**
044-23743007/8

**அலுவலகம்:**

001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

இந்திரா கிருஷ்ணமூர்த்தி நூயி (Indra Krishnamurthy Nooyi, பிறப்பு அக்டோபர் 28, 1955) உலகின் முன்னணி உணவு மற்றும் குளிர்பான நிறுவனங்களில் ஒன்றான பெப்சியின் தலைவர் மற்றும் அதன் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) ஆவார். 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதி, நூயி, ஸ்டீவன் ரெயின்முந்த் அவர்களுக்குப் பின்னர் அக்டோபர் 1, 2006 முதல் நிறுவனத்தின் தலைமைச் செயலதிகாரியாக செயல்படுவார் என அறிவிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு பிப்ரவரி 5 ஆம் தேதி, அவர் 2007 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதியிலிருந்து தலைவராக செயல்படுவார் என அறிவிக்கப்பட்டார். போர்பஸ் பத்திரிகை அதன் 2008 ஆம் ஆண்டிற்கான உலகின் 100 மிக வலிமையான பெண்கள் பட்டியலில் நூயியை மூன்றாவது நபராக மதிப்பிட்டது.




பார்ச்சுன் பத்திரிகை அதன் 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளுக்கான வணிகத்தில் மிகவும் வலிமையான பெண்கள் மதிப்பீட்டில் நூயியை முதலிடத்தில் வைத்திருந்தது.

# தொழில்துறையில் சாதனை படைக்கும் தமிழ்ப் பெண்

## இந்திரா கிருஷ்ணமூர்த்தி நூயி

2008 ஆம் ஆண்டு, நூயியின் பெயரை அமெரிக்காவின் சிறந்த தலைவர்களில் ஒருவராக யுஎஸ் நியூஸ் – வேர்ல்டு ரிப்போர்ட் வெளியிட்டது. ஆரம்பகால வாழ்க்கை மற்றும் தொழில் வாழ்க்கை

இந்திரா நூயி ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். அவர் தன் பள்ளிப்படிப்பைச் சென்னையிலுள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் AIHSS இல் நிறைவு செய்தார். அவர் 1974 ஆம் ஆண்டு சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் வேதியியல் பாடத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார், மேலும் கல்கத்தாவிலுள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் MBAபட்டம் பெற்றார். இந்தியாவில் நூயியின் தொழில் வாழ்க்கை ஜான்சன் & ஜான்சன் நிறுவனத்திலும் மேட்டூர் பியர்டுசெல் என்ற ஆடை நிறுவனத்திலும் தயாரிப்பு மேலாளர் பதவிகளை வகித்ததன் மூலம் தொடங்கியது. 1978 ஆம் ஆண்டு அவர் யேல் மேலாண்மை கல்வி நிறுவனத்தில் சேர்ந்து பொது மற்றும் தனியார் மேலாண்மை பாடப்பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1980 ஆம் ஆண்டு பட்டம்

பெற்று, நூயி போஸ்டன் கன்சல்ட்டிங் குரூப் (BCG) நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்தார். மேலும் மோட்டோரோலா மற்றும் ஏசியா பிரவுன் பொவரி ஆகியவற்றில் திட்டம் தொடர்பான பதவிகளை வகித்தார்.



மேலும் அவர் பெப்சிகோ இயக்குநர்கள் குழுமத்தின் உறுப்பினராகவும் இருந்தார், நூயி சர்வதேச மீட்புக் குழு, கேட்டலிஸ்ட் மற்றும் லிங்கோலன் சென்டர் பார் தி பெர்பார்மிங் ஆர்ட்ஸ் ஆகிய அமைப்புகளின் உறுப்பினராகவும் சேவை புரிந்தார். அவர் யாலே கார்பரேஷனின் தொடர் ஆய்வாளராகவும், டிரஸ்ட்டீஸ் ஆப் ஐசென்ஹோவர் பெலோஷிப்ஸின் போர்டு உறுப்பினராகவும் இருக்கின்றார், மேலும் தற்போது அமெரிக்கஇந்திய வணிகக் கவுன்சிலின் தலைவராகவும் சேவையாற்றுகிறார்.

2007 ஆம் ஆண்டு, இந்திய அரசாங்கத்தால் பத்ம விபூசன் விருதை பெற்றுக் கொள்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். 2008 ஆம் ஆண்டு, அமெரிக்க கலை மற்றும் அறிவியல் கழகத்தின் பெலோஷிப்புக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



பெப்சிகோ நிறுவனத்தில் 1994 ஆம் ஆண்டில் சேர்ந்தார், பின்னர் 2001 ஆம் ஆண்டு தலைவர் மற்றும் CFO ஆக பதவியேற்றார். நூயி அவர்கள் நிறுவனத்தின் உலகளாவிய திட்டத்தை பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நிர்வகிக்கின்றார், மேலும் 1997 ஆம் ஆண்டு அதன் உணவுவிடுதிகள் விற்பனையை டிரைகானுக்கு மாற்றியது உள்ளிட்ட பெப்சிகோவின் மறுகட்டமைப்பில் முன்னிலை வகித்தார், டிரைகான் இப்போது யூம்பிராண்ட்ஸ் என அழைக்கப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டில் டிரோபிகானா நிறுவனத்தைக் கையகப்படுத்தி குவாக்கர் ஓட்ஸ் நிறுவனத்துடன் இணைத்ததில் முதன்மைப் பொறுப்பை எடுத்துக்கொண்டார், இந்நிறுவனமும் கடோரேட் இடமிருந்து பெப்சிகோவிற்கு வாங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டில் அவர் பெப்சிகோவின் 44 ஆண்டுகால வரலாற்றில் ஐந்தாவது தலைமை நிர்வாக அதிகாரி ஆனார்.

வணிக அதிகாரிகள் அவரது ஆழமாக வழிநடத்தும் திறன் மற்றும் இதயப்பூர்வமான உழைப்பு மற்றும் வேடிக்கை ஆகியவற்றைக் கண்டு வியப்படைந்தார். பிசினஸ்லீக் பத்திரிக்கையின் படி, அவர் 2000 ஆம்

ஆண்டில் தலைமை நிதி அதிகாரி பதவி ஏற்றதிலிருந்து, நிறுவனத்தின் ஆண்டு வருவாய் 72 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது, அதன் நிகர லாபம் 2006 ஆம் ஆண்டில் இருமடங்குக்கும் அதிகமாக $5.6 பில்லியனாக இருந்தது.

வால் ஸ்ட்ரீட் ஜேர்னல் பத்திரிக்கையின் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டின் வெளிவந்த கவனிக்கத்தக்க 50 பெண்கள் பட்டியலில் நூயியின் பெயர் இடம்பெற்றது, மேலும் டைம் பத்திரிக்கையின் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டில் வெளிவந்த உலகில் 100 மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய நபர்கள் பட்டியலிலும் இடம் பெற்றார். போர்பஸ் பத்திரிக்கை 2008 ஆம் ஆண்டில் மிகவும் சக்திவாய்ந்த 3 ஆவது பெண் என்று அவரது பெயரைக் குறிப்பிட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டின் போர்பஸ் ஆய்வறிக்கையின் படி இந்திரா நூயி உலகின் 3 ஆவது மிகவும் சக்திவாய்ந்த பெண்ணாகக் குறிப்பிடப்பட்டார்.

ஜனவரி 2008 ஆம் ஆண்டில், அமெரிக்க இந்திய வணிகக் கவுன்சில் (USIBC) தலைவராக நூயி தேர்ந்தெடுக்கப்பட்டார், இலாபநோக்கற்ற வணிக ஆலோசனை அமைப்பான இது, இந்தியாவில் வணிகம் செய்யும் உலகின் 300க்கும் மேற்பட்ட மிகப்பெரிய நிறுவனங்களைக் குறிக்கின்றது. நூயி USIBC இன் போர்டு இயக்குநர்களை வழிநடத்துகின்றார், இது அமெரிக்க தொழில்துறையைப் பிரதிபலிக்கும் 60க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகளின் கூட்டமைப்பு ஆகும்.

**- திருமதி.சுஜாதா மூர்த்தி**

# உங்களின் விழிப்புணர்வுக்கு !

1. இந்தியா மூன்று பக்கம் ஊழலாலும், ஒரு பக்கம் கடனாலும் சூழப்பட்ட நாடு...
2. தோசைக்கல் உள்ளே இருந்தால் உயர்தர ஹோட்டல்.. வெளியே இருந்தால் சாதா ஹோட்டல்..
3. வாக்கிங் போறது எளிதானதுதான்... வாக்கிங் போக எந்திரிக்கிறது தான் கஸ்டமானது.
4. உலகத்துலயே ஸ்பீட்பிரேக் ஓரத்துல பாதையை உருவாக்கி வண்டி ஓட்டுற டெக்னிக் வேற யாருக்கும் வராது..
5. கீழே விழுந்ததும் அடிபடவில்லை என்பதைவிட, யாரும் பார்க்கவில்லை என்பதே நிம்மதி..
6. மதம் மாறினால்தான் கடவுள் ஆசீர்வதிப்பார் என்றால் உண்மையில் அவர் கடவுள் இல்லை, கட்சித் தலைவர்..
7. பியூட்டி பார்லர் போன மறுநாளே ஐஸ்வர்யாராய் போல நாம் ஆகலாமென நினைக்கிறவங்க பெண்கள்..
8. ஜிம்முக்குப் போன நாளே நாமும் அர்னால்டு போல ஆகலாமெனு



நினைக்கிறவங்கதான் ஆண்கள்..

9. இந்த ஜெனரேஷன்ல ஆல்கஹாலுக்கு அடிமையானவனவிட, ஆன்ட்ராய்டுக்கு அடிமையானவன்தான் ஜாஸ்த்தி.
10. பேஸ்புக், டுவிட்டர் பக்கமெல்லாம் வராதவர்கள் தன் வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டுதானே இருக்கிறார்கள்.
11. கிணத்த தூர்வாருவோம்னு கெளம்பு னாங்க! இப்ப கெணத்தகாணோம்னு சொல்ற காலமாகிப்போச்சு!!



# காதலும்..! துரோகமும்..!

மதுரை மாவட்டத்தில் எங்கு ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டாலும், குறிப்பாக அலங்காநல்லூர், பாலமேடு மற்றும் அவனியாபுரம் பகுதிகளில் சாமி மாடு என்று முதலாவாக ஒன்றை அவிழ்த்து ஓடவிடுவார்கள். அதை யாரும் பிடிக்கக்கூடாது என்பது ஆண்டாண்டு கால மரபு. விபரம் அறிந்தவர்களுக்குத் தெரியும் அந்த மாடு மாவீரன் அழகாத்தேவன் நினைவாகவே அவிழ்த்துவிடப்படுகிறது என்பது.

**யார் இந்த அழகாத்தேவன்?**

மதுரை மாவட்டத்தில் சொரிநாயக்கன்பட்டியைச் (இன்றைக்கு அது சொரிக்காம்பட்டி) சேர்ந்தவர் கருத்தமாயன். நிலபுலன்களோடு வாழ்ந்த செல்வந்தர். அவரது கடைக்குட்டி அழகாத்தேவன் புஜபல பராக்கிரமுடைய இளைஞன். ஆனால் பொறுப்பில்லாமல் தனது நண்பன் தோட்டி மாயாண்டியோடு ஊர் சுற்றும் நாடோடி.

அழகாத்தேவனுக்கு கால்கட்டு (கல்யாணம்) போட்டுவிட்டால் பையன் ஒழுங்காக இருப்பான் என்று பெரியவர்கள் கூறியதைக் கேட்ட கருத்தமாயன் பெண் பார்க்கும் படலத்தைத் தொடங்கினார்.

நாகமலைக்கு அருகேயுள்ள கீழக்குயில்குடியில் வாழ்ந்து வரும் கருத்தமலையின் மகள் ஒய்யம்மாள் குறித்து அறிந்து, தன் செல்வாக்குக்கு சமமாக இல்லையெனினும் கருத்தமாயன், கருத்தமலையின் வீட்டிற்கு பெண் பார்க்கச் செல்கிறார்.

கருத்தமலைக்கோ ஏக மகிழ்ச்சி. தனது மகளைப் பெண் பார்க்க கருத்தமாயன் வருவதையறிந்து ஊருக்குள் தடபுடல் செய்கிறார். வழக்கமான சம்பிரதாயங்கள் முடிந்த பின்னர் கருத்தமாயன், தனது மகன் அழகாத்தேவனுக்கு ஒய்யம்மாளைக் கேட்கிறார். கருத்தமலையோ தனது மகளிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்று கூறி ஒய்யம்மாளிடம் கேட்கிறார்.

அவளுக்குப் அழகாத்தேவனைப் பிடித்துப்போனாலும், நிபந்தனை ஒன்றை விதிக்கிறாள். தான் வளர்த்து வரும் ஏழு காளைகளை அழகாத்தேவன் அடக்கினால், திருமணத்துக்கு ஒத்துக் கொள்வதாகவும், ஒருவேளை தோற்றால் தனது வீட்டில் பண்ணை அடிமையாக வேலை பார்க்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கிறாள்.

இந்த சவாலை அழகாத்தேவனும் ஏற்றுக் கொள்கிறான். காளையை அடக்குவதற்கு நாள் குறிக்கிறார்கள். தனது நண்பன் தோட்டி மாயாண்டியோடு இணைந்து கடும் பயிற்சி மேற்கொள்கிறான் அழகாத்தேவன். அந்த நாளும் வருகிறது. இரண்டு ஊர்ப் பொது மக்கள் மட்டுமன்றி, பக்கத்து ஊர் ஜனங்களும் கூடி நிற்க அழகாத்தேவன், வாடிவாசல் அருகே ஒய்யம்மாள் வளர்த்த ஏழு

காளைகளை ஒவ்வொன்றாக எதிர்கொள்கிறான்.

அனைத்துக் காளைகளையும் மிகத் திறமையாகக் கையாண்டு வீழ்த்திய அழகாத்தேவன், ஏழாவது காளையோடு மல்லுக்கட்டுகிறான். கடுமையான போராட்டத்திற்கிடையே அந்தக் காளை அழகாத்தேவனின் வயிற்றைப் பதம் பார்க்கிறது.

குடல் வெளியே சரிந்த நிலையிலும் போராடி அந்தக் காளையை அடக்கிவிடுகிறான். உயிருக்கு ஆபத்தான நிலையில், அழகாத்தேவனை அழைத்துச் செல்கின்றனர். ஆனாலும் வாக்குக் கொடுத்த காரணத்திற்காக கருத்தமலை பெண் கொடுக்க சம்மதம் தெரிவிக்கிறார்.

சுத்துப்பட்டு கிராம ஜல்லிக்கட்டுகளில் பெயர் பெற்ற தங்களது காளைகளை அடக்கிவிட்டானே என்ற பொறாமையின் காரணமாக ஒய்யம்மாளின் சகோதரர்களுக்கு அழகாத்தேவனைப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்து, அழகாத்தேவனுக்கு மருத்துவம் பார்த்த பெண்ணை சரிக்கட்டி, அவனது உடம்பில் கொஞ்சம் கொஞ்சமாக விஷம் ஏற்றிக் கொலை செய்துவிடுகிறார்கள்!

இந்தச் செய்தி ஒய்யம்மாளுக்குத் தெரியவரும்போது, தாங்கொணாத துயரத்தில் அழகாத்தேவனோடு உடன்கட்டை ஏறி தனது உயிரை மாய்த்துக்கொள்கிறாள்.

அழகாத்தேவன் நினைவாக அவனது பரம்பரையில் வந்தவர்கள், மதுரை மாவட்டம் செக்கனூரணிக்கு அருகிலுள்ள சொரிக்காம்பட்டியில் கோயில் கட்டி வணங்கி வருகின்றனர்.

கருவறையில் காளையோடு அழகாத்தேவன் நிற்க... அக்கோயிலுக்கு வெளியே அமைக்கப்பட்ட நினைவு வளைவில் நண்பன் தோட்டி மாயாண்டிக்கும் சிலை எழுப்பியுள்ளனர்.

கீழக்குயில்குடிக்காரர்களிடம் சொரிக்காம் பட்டிக்காரர்கள் எந்தவித மண உறவோ, கொடுக்கல் வாங்கலோ இப்போதும் வைத்துக்கொள்வதில்லை. இந்த மரபு காலங்காலமாகத் தொடர்கிறது.

நானூறு ஆண்டுகால காதல் வரலாற்றை மதுரை மாவட்ட ஜல்லிக்கட்டு போட்டிகள் இன்றும் தழும்பாகச் சுமந்து கொண்டிருக்கின்றன... சொரிக்காம்பட்டி கிராம எல்லையில்... தோட்டி மாயாண்டி காவல் நிற்க... அழகாத்தேவன் கருவறையில் காளையோடு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான்... ஒய்யம்மாள் அக்கருவறை காற்றோடு காற்றாய்... காதலும் துரோகமும் நாணயமும் ரோசமும் நிறைந்தது இந்த வீர வரலாறு

– நாகராஜ்


பயிற்சி மையம் தொடங்க

BCVT

NO ROYALTY

NO DEPOSIT

ICL EGAC

கம்ப்யூட்டர் சென்டர்

BCVT - உலகத்தரச்சான்று பெற்றது

BCVT - NIC.UNIVERSITY இணைப்பு

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.
நீங்கள் விரும்பும் பெயரில் சென்டர்.

கம்ப்யூட்டர் பயிற்சி மையம் தொடங்க ரூ. 1000/-மட்டும்.

விடியல் பயிற்சி மையம்

தமிழகம் முழுவதும்,தாலுக்கா அளவில் 1 வருட பயிற்சி நடத்த வரவேற்கப்படுகிறது.

கேட்டரிங்,ஆசிரியை பயிற்சி,
எலக்ட்ரிக்கல்,ஃபயர்சேப்டி,வெல்டர்,
பிட்டர் மேலும் 1 வருடபயிற்சிகள்.

விடியல் பயிற்சிமையம் தொடங்க ரூ. 2000/-மட்டும்.

கட்டணத்தில் : 70% : 30%

தொண்டு நிறுவனம்,மகளிர் குழுக்கள்,
டுட்டோரியல்,கம்ப்யூட்டர் சென்டர் மற்றும்
வேலைத்தேடும் இளைஞர்களுக்கு
கல்வியுடன் கூடிய வருமான வாய்ப்பு
மற்றும் Skill Testing Centre ஆக வாய்ப்பு.

BCVT

6/4,சீனிவாசநகர்,ரேஷன் கடை அருகில்,
கோவில்பட்டி(Po),தூத்துக்குடி மாவட்டம்.

Cell : 99946 69307 / 94426 98566

Website :www.bcvt.org

# பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பாக்குமட்டை தட்டுகள்! தயாரிப்பதற்கு இலவச தொழில் பயிற்சி வாய்ப்பு!



ஜீ.கே. எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் இளைஞர்கள், பெண்கள், பணி ஓய்வுக்கு பிறகும் தொழில் செய்ய விரும்புவர்கள் என முத்தரப்பைச் சேர்ந்தவர்களுக்கும் பாக்குமட்டை தயாரிக்கும் பயிற்சியை இலவசமாக, எளிமையாக தெளிவான முறையில் ஜீ.கே. எண்டர்பிரைசஸ் இயக்குனர்.கணேஷ்குமார் அவர்கள் நேரிடையாக செயல்முறைப் பயிற்சியாக கற்றுக்கொடுக்கிறார்.

பயிற்சியின் முதல் நிலையாக பாக்குமட்டை தயாரிப்பு சார்ந்த தொழில் ஆலோசனை, தொழில் தொடங்குவதற்கான என்னென்ன அடிப்படை வசதிகள் தேவை, தொழிலாக இதை செய்வதற்கு அரசு சார்ந்து கிடைக்கும் மானியக் கடனை மின்சார இணைப்பிற்கான மானியக் சலுகையுடன் எப்படிப்பெறுவது, இயந்திரங்களை எவ்வாறு இயக்குவது போன்றவற்றை ஒருநாள் பயிற்சியிலேயே தெளிவாகக் கற்றுத்தருகிறார். பெண்கள்கூட மிக எளிதான முறையில் இயக்கக்கூடிய நவீன தொழில்நுட்பம் கொண்ட பாக்குமட்டை தயாரிக்கும் இயந்திரங்களை இந்த நிறுவனமே வடிவமைத்து கொடுக்கிறது.



இயக்குனர்
கணேஷ்குமார்

இரண்டாவது நிலையாக ஒருநாள் பயிற்சியில் ஒரு நிமிடத்தில் எவ்வளவு பாக்குமட்டை தட்டுகள் தயாரிக்க முடியும் என்றும் அதை பேக்கிங் ஒன்றுக்கு 50 என்ற அளவில் எவ்வாறு அடுக்கிவிற்பனைக்கு அனுப்புவது என்ற விளக்கங்களையும் கற்றுக்கொடுக்கிறார் இயக்குனர். கணேஷ்குமார்.

தொழில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்தப் பயிற்சியை இலவசமாக கற்றுக்கொடுக்கும் நோக்கமே பிறரிடம் சென்று பணியாற்றாமல் தாங்களே சுயதொழில் முனைவோர்களாக ஆகவேண்டும் என்ற நோக்கமே.சுயமாக தொழில் செய்ய விரும்புகிறவர்களுக்கு தொழிலுக்கான வங்கி, மின்சாரக் கடன்களுக்கான மானியங்களை மாவட்ட தொழில் மைய மேலாளர் மூலம் எப்படி பெறுவது போன்ற விவரங்களையும்கற்றுக்கொடுத்து பயனடையச் செய்கிறார்.



இந்த நிறுவனம் 12 ஆண்டு காலமாக வெற்றிகரமாக இந்த பயிற்சியை அளித்து பாக்குமட்டையின் விற்பனை வாய்ப்பை பல இடங்களிலும் பரவலாகதொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகிறது. அண்மைக்காலமாக தொடர்ந்து அதிகரித்து வரும் விழிப்புணர்வின் காரணமாக பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பாக்குமட்டை தயரிர்ப்பு பொருட்களுக்கு பயன்பாடுஅதிகரித்து வருவதற்கு விழிப்புணர்வோடு பராமரிப்பு செலவும் இதற்கு குறைவு என்பதுதான்.

பயன்படுத்திய பாக்குமட்டைத் தட்டுகளை குப்பையில் போடும்போது மண்ணில் மக்கி சுற்றுச்சூழல் மாசு ஏற்படாமல் மண்ணின் நலம் காக்கும் வளமான உரமாக பயன்படுகிறது. பாக்குமட்டை தட்டுகள் 16 வடிவங்களில் தயாரிக்கப்படுகிறது. (வட்டம், சதுரம், செவ்வகம், அறுகோணம்)4 இஞ்ச் அளவில் இருந்து 14 இஞ்ச் வரை கப்புகள்(குவளைகள்) மற்றும் தட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

பாக்குமட்டை தட்டுகளை உணவகங்கள், திருவிழாக்கள், திருமணங்கள், அலுவலக விழாக்கள், மருத்துவமனை கேண்டீன்கள் என எல்லா இடங்களிலும் பயன்படுத்தலாம். இத்தொழிலைத் தொடங்க குறைந்தபட்சம் இயந்திரம், மூலப்பொருள், மின்கட்டண அனுமதி என எல்லாமும் சேர்த்து 3 இலட்சம் முதல் 31/2 இலட்சம் ரூபாய் வரை ஆகும் நிலையில் ஜீ.கே. எண்டர்பிரைசஸ் நிறுவனம் வழிகாட்டலில் கடன்கள் மானியம் சார்ந்த கடன்களாக வங்கியில் மாவட்ட தொழில் மையம் மூலம் பெறமுடியும். மத்திய, மாநில அரசுகள் வழங்கும் தொழிற்கடன்களான நீட்ஸ், முத்ராபோன்ற திட்டங்கள் மூலம் கடன் பெற்று இந்தத் தொழிலை தொடங்கலாம்.

ஜீ.கே. எண்டர்பிரைசஸில் பயிற்சி பெற்று உரிய வழிகாட்டலில் சென்னையில் தாம்பரம், குரோம்பேட்டை, திருவள்ளூர் ஆகிய இடங்களில் குறைந்தபட்சமாக 85 கிளைகள் செயல்பட்டு வருகிறது. " பிளாஸ்டிக் மாசில்லா தமிழகம்" என்ற அறிவிப்பை தமிழகம் மேற்கொண்டுள்ள இக்காலக்கட்டத்தில் ஜீ.கே. எண்டர்பிரைசஸ் நிறுவனம் அதற்கானமாற்றுத் தொழில் வாய்ப்பை வழங்கி வழிகாட்டி வருகிறது. ஆர்வமுள்ளவர்கள் ஜீ.கே. எண்டர்பிரைசஸின் மேலாண் இயக்குனர் கணேஷ்குமார் அவர்களை தொடர்புக் கொண்டு வாழ்வில் வளம் பெறலாம்.

தொடர்புக்கு: 95850 68246.

– சசி



விவசாயம்



தென்னை மரம் ஏறினால் தினமும் ரூ.1000

# இளைஞர்களுக்கு அருமையான வேலைவாய்ப்பு பயிற்சி

தென்னை மரங்களின் நண்பன் என்ற திட்டத்தின் மூலம் வேலையில்லா இளைஞர்கள், இயந்திரம் மூலம் தென்னை மரங்களில் ஏறி வருவாய் ஈட்ட அதற்கான பயிற்சியை அளிக்கிறது வேளாண் அறிவியல் மையம்.

கிருஷ்ணகிரியை அடுத்த எலுமிச்சங்கிரி கிராமத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் இயந்திரத்தின் உதவி கொண்டு எளிதில் தென்னை மரம் ஏறி வருவாய் ஈட்டுவதற்கான பயிற்சியை அளித்து வருகிறது. இதுகுறித்து அந்த மையத்தின் தலைவர் சுந்தரராஜ்

கூறியிருப்பதாவது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வேலையில்லா இளைஞர்கள், பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலும், தேங்காய்களைப் பறிக்கும் வேலையாள்களின் பற்றாக்குறையைப் போக்கவும், கேரள மாநிலம், கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியமும், கிருஷ்ணகிரி, எலுமிச்சங்கிரியில் உள்ள அறிவியல் மையமும் இணைந்து தென்னை மரங்களின் நண்பன் என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

17 வயது முதல் 40 வயது வரையுள்ள, 7ஆம் வகுப்பு வரையில் கல்வி பயின்ற ஆண், பெண் இருவரும் இந்த பயிற்சியைப் பெறத் தகுதியானவர்கள். அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு, இயந்திரத்தின் மூலம் தென்னை மரம் ஏறுவது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இயந்திரத்தைக் கையாள்வது, பராமரிப்பது, தொழில் நுட்பங்கள் உள்ளிட்டவை குறித்தும் பயிற்சி வழங்கபடுகிறது.

இவை மட்டுமல்லாமல், தென்னை மரங்களைத் தாக்கும் நோய்கள், பூச்சித் தாக்குதலின் அறிகுறிகள், மேலாண்மை முறைகள், தென்னை மரத்தின் ரகங்கள், சிறந்த தென்னங் கன்றுகளைத் தேர்வு செய்வது குறித்தும், தென்னை சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள், நீர் மேலாண்மை, உர மேலாண்மை, மனிதவள மேம்பாட்டுக்கான தலைமை பண்புகள், கால மேலாண்மை போன்றவை குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியில் பங்கேற்போருக்கு ஓராண்டுக்கான இலவச காப்பீடு, ரூ.4 ஆயிரம் மதிப்பிலான தென்னை மரம் ஏறும் இயந்திரம், பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 6 நாள்கள் பயிற்சி வழங்கப்படும் நிலையில், இருப்பிடம் மற்றும் உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது.

சாதாரணமாக ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு 30 மரங்கள் மட்டுமே ஏற இயலும். ஆனால், இயந்திரத்தைப் பயன்படுத்தி மரம் ஏறும் பயிற்சி பெற்ற நபர் ஒரு நாளைக்கு இயந்திரத்தின் மூலம் குறைந்தது 50 முதல் 70 மரங்கள் ஏற இயலும். உடலுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது. ஒரு மரத்துக்கு ஏறி இறங்க ரூ.30 கூலி எனக் கொண்டால், குறைந்தது ஒரு நாளைக்கு ரூ.1,500 வருவாய் ஈட்டலாம். நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக ரூபாய் ஆயிரம் வருவாய் உறுதியாக ஈட்டலாம் எனத் தெரிவித்தார்.

முதலீடு இல்லாமல் நல்ல வருவாய் தரக் கூடிய இந்த திட்டம் குறித்து ஆர்வம் உள்ளவர்கள் வேளாண் அறிவியல் மையம், எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி என்ற முகவரியிலோ அல்லது வேளாண் அறிவியல் மையத்தை 04343296039, 80982 80123 என்ற எண்களிலோ அல்லது வேளாண் அறிவியல் மையத்தின் தலைவரை 94438 88644 என்ற கைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்

# குழந்தைகள் காப்பகம்..! வீட்டிலிருந்தபடி சம்பாதிக்க எளிய வழி!

மகளிர் இப்போதெல்லாம் எத்தனையோ தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் பல சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். பெண்கள் தமக்கு விருப்பமான ஒரு விஷயத்தை, வருமானம் தரும் தொழிலாகவும் மாற்றிக்கொள்ளும் போது இன்னும் அதிக ஈடுபாடு ஏற்படும் அல்லவா!

கூட்டுக் குடும்பங்கள் இல்லாத சூழ்நிலை, வேலைக்குச் செல்லும் பெண்கள் சக பணியாளர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு தங்கள்வேலை முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டிய நிலை, அதிக விடுமுறை எடுக்க முடியாதது. வீட்டில் தனிப்பட்ட முறையில் ஆள் வைத்துக்கொள்ள முடியாதது போன்ற சூழ்நிலைகள் பெண்களுக்கு ஏற்பட்டுள்ளன. இப்படி பல காரணங்களால் குழந்தைகள் காப்பகம் மிகவும் அவசியமான ஒன்றாக மாறி வருகிறது. அதிலும் அனுபவம் நிறைந்த நம்பகமான குழந்தைகள் காப்பகம் கிடைத்தால் மக்களுக்கு அது மிகப்பெரிய வரம்தான்.



குழந்தைகள் காப்பகம் நடத்துவதற்கு முதலில் நல்ல இடம் தேவைப்படும். குழந்தைகளுக்கு அது பாதுகாப்பான இடமாகவும் இருக்க வேண்டும். இந்த சேவைக்கு அதிகப் பொறுமையும், சிறு குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதில் நல்ல அனுபவமும் இருக்க வேண்டும். துணைக்கு ஒன்றிரண்டு உதவியாளர்கள் தேவைப்படலாம். இது தவிர, முதலீடு என்று சொல்ல வேண்டும் என்றால், குழந்தைகளுக்கான ஸ்ட்ரோலர், படுக்கைகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை வாங்கக வேண்டியிருக்கும்.

இது தேவை அதிகமுள்ள அதிக சேவை என்பதால் வாடிக்கையாளர்கள் கிடைப்பதில் சிரமம் ஒன்றும் இருக்காது. இத்தொழிலைத் தொடங்குவோர் கவனம் செலுத்த வேண்டிய சில விஷயங்களை பற்றிப் பார்ப்போம்.

குழந்தைகளின் பெற்றோர் பெயர், முகவரி, தொலைபேசி எண், அலுவலக முகவரி, அவசரத் தேவைக்குமாற்று எண், குழந்தைகளின் தொடர்பு எண், முகவரி, தினசரி கொடுக்க வேண்டிய டானிக், மருந்து போன்ற விவரங்கள் கொண்ட படிவத்தை தயார் செய்து கொள்ள வேண்டும். இப்படிவத்தை பெற்றோரிடம் கொடுத்து பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ள வேண்டும். கூடுமானவரை பெற்றோர் கொண்டு வந்து தரும் உணவுகளையே குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

குழந்தைகள் வெகுசுலபமாக புதிய சூழலுக்கு பழகி விடுவார்கள். குழந்தைகள் காப்பகங்களிலும் ஆரம்பத்தில் சில தயக்கங்கள் இருந்தாலும் பிறகு பழகி விடுவார்கள். மதியம் காற்றோட்டமான இடத்தில் குழந்தைகள் தூங்கி எழ பழக்கிவிட வேண்டும். மாலையில் சிறிது வெட்டவெளியில் விளையாட, வேடிக்கை பார்க்க வைக்க முடிந்தால் நல்லது. குழந்தைகளை பார்த்துக்கொள்ளும் நேரம் எது என்பதை முதலிலேயே தெளிவாக பெற்றோர்களிடம் பேசிவிட வேண்டும். ஏதேனும் அவசரத் தேவைப்பட்டால் தொடர்பு கொள்ள காப்பகத்துக்கு அருகாமையில் இருக்கும் மருத்துவமனை விவரங்களைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இனி இந்த தொழிலில் ஏற்படக்கூடிய சில சிரமங்கள், அவற்றை எதிர்நோக்குவது எப்படி என்பதைப் பார்க்கலாம். குழந்தைகள் அசுத்தம் செய்தால் முகம் சுழிக்காமல் சுத்தம் செய்ய, இடத்தைப் பராமரிக்க,நல்ல பழக்கங்களுடன் தானும் சுத்தமாக இருக்கக்கூடிய உதவியாளர்கள் வேண்டும். இவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது

மிகுந்த கவனத்துடன் தேர்வு செய்யுங்கள். குழந்தைகள் ஒன்றோடொன்று சண்டை போடலாம். அடித்து, கிள்ளி விளையாடலாம். இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

குழந்தைகளின் உடல்நலம் எதிர்பாராமல் பாதிக்கப்படலாம். குழந்தைகளுக்கே உரித்தான வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், அடிபடுதல் போன்றவை திடீரென ஏற்படலாம். முதலுதவிக்குத் தேவையான உடனடியான மருந்துகளை வைத்திருக்க வேண்டும். அதேசமயம், சம்பந்தப்பட்ட பெற்றோரிடம்

சரியான தகவல்களை உடனே சொல்லிவிட வேண்டும். அதேபோல குழந்தைகளக்கு ஏதேனும் உடல்நலக்குறைவு இருந்தால் பெற்றோர்களும், சரியான தகவல் தெரிவிக்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருங்கள். நீங்கள் நீண்ட விடுமுறை எடுப்பது சற்று சிரமம். அப்படிப்பட்ட சூழலில் வாடிக்கையா ளரிடம் முடிந்தவரை முன்கூட்டியே சொல்லிவிட வேண்டும்.

இனி இந்தச் சேவைப் பணியின் சிறப்பம்சங்களைப் பார்ப்போம். இது மிகவும் தேவைப்படும் சேவை என்பதால் நல்ல வரவேற்பு இருக்கும். சேவை சிறப்பாக இருக்கும் பட்சத்தில், வாய்மொழி மூலமாகவே வாடிக்கையாளர்கள் அதிகம் கிடைப்பார்கள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ள துறை இது.

அதிகக் குழந்தைகள் சேர்க்க முடிந்தால், சிறிய அளவில் பிளே ஸ்கூலையும் சேர்த்து நடத்தலாம். இன்னும் தொழில் முறையில் நடத்த விரும்பினால், குழந்தைகள் விளையாடும் இடத்தில் குளோஸ் சர்க்யூட் காமிரா மற்றும் பெற்றோர் அடிக்கடி தொலைபேசியில் பேச விரும்பினால் அதற்கென தனியான உதவியாளர் என கூடுதல் வசதியான சேவைகளை அளிக்கலாம். இதற்கென கட்டணமும் கூடுதலாக இருந்தாலும், நல்ல இடத்தில் குழந்தை பாதுகாப்பாக இருப்பதால் மனமுவந்து பணம் கட்டுவார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக சின்னஞ்சிறு மழலைகளுடன் நேரத்தை செலவிடுவது மிகவும் ஆனந்தம் தரும் விஷயமாகும். வாடிக்கையாளர் களான தாய்மார்கள் அடையும் நிம்மதி நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

– கலா

# கருப்பைப் கோளாறு நீக்கும் அரச இலை, விதை!

கருப்பை நோய்கள் ஏற்படுதல். தேவையானவை : அரச மரத்தின் இலை,அரச மரத்தின் பட்டை,அரச மரத்தின் விதை, அரச மரத்தின் வேர்.

செய்முறை: அரச மரத்தின் இலை, பட்டை, வேர் மற்றும் விதை ஆகியவற்றை இடித்து பொடியாக்கி வைத்துக்கொண்டு கஷாயம் செய்து குடித்து வந்தால் கருப்பைக் கோளாறுகள் நீங்கி நலம் பெறலாம்.

அறிக்குறிகள்: கருப்பை நோய்கள் ஏற்படுதல்.

தேவையானவை:
அரச மரத்தின் இலை,
அரச மரத்தின் பட்டை,
அரச மரத்தின் விதை,
அரச மரத்தின் வேர்.

செய்முறை: அரச மரத்தின் இலை, பட்டை, வேர் மற்றும் விதை ஆகியவற்றை இடித்து பொடியாக்கி வைத்துக்கொண்டு கஷாயம்



செய்து குடித்து வந்தால் கருப்பைக் கோளாறுகள் நீங்கி நலம் பெறலாம்.

# முக்கிய வரலாற்று நிகழ்வுகள்!



- S.JANAKI
STD XI- GOOD SHEPHERED
M.H.S,School Chennai

| நிகழ்வுகள் | |
|---|---|
| 1838 | சாமுவேல் மோர்ஸ் மின்னியல் தொலைத்தந்தியை முதன் முறையாக வெற்றிகரமாக சோதித்தார். |
| 1887 | எத்யோப்பியாவின் ஹரார் நகர மன்னன் இரண்டாம் அப்துல்லா எத்யோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மீது போர் தொடுத்தான். |
| 1899 | இந்தியாவின் வைசிராயாக கேர்சோன் பிரபு நியமிக்கப்பட்டார். |
| 1900 | போவர்கள் தென்னாப்பிரிக்காவின் லேடிஸ்மித் நகரைத் தாக்கினர். 1,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். |
| 1907 | மரியா மாண்ட்டிசோரி தனது முதலாவது பாடசாலையை தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக ரோமில் ஆரம்பித்தார். |
| 1912 | நியூ மெக்சிக்கோ 47வது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது. |
| 1928 | தேம்ஸ் ஆறு லண்டனில் பெருக்கெடுத்ததில் 14 பேர் கொல்லப்பட்டனர். |
| 1929 | அன்னை தெரேசா இந்தியாவின் வரிய மற்றும் நோயுற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக கொல்கொத்தாவைச் சென்றடைந்தார். |
| 1936 | கலாஷேத்திரா சென்னை அடையாறில் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1940 | போலந்தின் பொஸ்னான் நகரில் நாசி ஜெர்மனியினரால் பலர் கொல்லப்பட்டனர். |
| 1950 | ஐக்கிய இராச்சியம் மக்கள் சீன குடியரசை அங்கீகரித்தது. |
| 1959 | பிடெல் காஸ்ட்ரோ கவானாவை அடைந்தார். |
| 2007 | கொழும்பிலிருந்து 36கிமீ தொலைவில் நித்தம்புவ என்ற இடத்தில் இடம்பெற்ற பேருந்துக் குண்டுவெடிப்பில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 50 பேர் வரை காயமும் அடைந்தனர். |
| **பிறப்புகள்** | |
| 1899 | சேர் சிற்றம்பலம் கார்டினர், இலங்கைத் தொழிலதிபர் (இ. 1960) |
| 1910 | ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1965) |
| 1924 | கிம் டாய் ஜுங், தென்கொரியக் குடியரசுத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 2009) |
| 1944 | ரோல்ஃப் சிங்கேர்னாகல், நோபல் பரிசு பெற்றவர். |
| 1959 | கபில் தேவ், இந்தியத் துடுப்பாட்டக்காரர். |
| 1967 | ஏ. ஆர். ரஹ்மான் இந்திய திரைப்பட இசையமைப்பாளர் |
| 1982 | கில்பர்ட் அரீனஸ், அமெரிக்கக் கூடைப்பந்து வீரர் |
| **இறப்புகள்** | |
| 1852 | லூயி பிரெயில், பார்வையற்றவர்களுக்கான எழுத்தினை உருவாக்கியவர் (பி. 1809) |
| 1884 | கிரிகோர் ஜோஹன் மெண்டல் ஆஸ்திரியப் பாதிரி, மரபியல் அறிவியலின் தந்தை (பி. 1822) |
| 1918 | கேன்ட்டர், ஜெர்மன் கணிதவியலாளர் (1845) |
| 1919 | தியொடோர் ரோசவெல்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அதிபர் (பி. 1858) |
| 1990 | பாவெல் செரென்கோவ், நோபல் பரிசு பெற்ற இரசியர் (பி. 1904) |
| 1997 | பிரமீள், ஈழத் தமிழ் எழுத்தாளர், |
| 2010 | திருவேங்கடம் வேலுப்பிள்ளை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை |




# கூட்டணி அரசியலும்! கூட்டலும் கழித்தலும்!

பருவ நிலையில் நாளுக்கொரு மாற்றம் நேற்றுவரை கொட்டித்தீர்த்த பனிமழை திடீரெனமேக மூட்டமாகி வெயில் வறுத்தொடுக்கக் தொடங்கியிருக்கிறது. ஆனாலும் நடுங்கிக் கொண்டே வந்தார் கபாலிகான்.

"என்ன ஆச்சு" என்று அவரிடம் கேட்க, "சூழல் மாறுதலால் கொஞ்சம் காய்ச்சலா இருக்கு வேற எதுவும் இல்ல என்றவர் நான் சொன்னபடிதான் நடந்தது என்று முணுமுணுத்தபடி சென்றார்.

எதைப்பற்றி சொல்கிறீர்கள் கொஞ்சம் விவரமாக சொல்லுங்கள், என்று கேட்டதற்கு திருவாரூரில் இடைத்தேர்தல் நடப்பதை தி.மு.க. உள்ளிட்ட பலரும் விரும்பாமல் தேர்தலை நிறுத்துவதற்காக

நீதிமன்றப்படியில் நிற்பதாக சொல்லி இருந்தேன். நான் சொன்னதுப்போலவே தேர்தல் ரத்துசெய்யப்பட்டுவிட்டது. தேர்தல் ஆணையம் கஜாபுயல் நிவாரண்ப்பணிகள் நிறைவுபெறாததே ரத்துக்கான காரணம் என்றாலும் தேர்தல் காரணங்களுக்காகவேரத்து செய்யபட்டதாக சுற்றுவட்டார தகவலாகவும், ஆளும் கட்சிக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கலாம் என்றும் பேசப்படுகிறது.

எப்படி இவ்வளவு தெளிவாக சொல்கிறிர்கள் என்று கேட்டதற்கு தி.மு.க. அ.ம.மு.க. கட்சிகள் இடைத்தேர்தல்வேட்பாளர்களை அறிவித்த போதும் ஆளும் கட்சியான அ.தி.மு.க, மட்டும் அறிவிக்கவில்லை, தவிர தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் தமிழிசை சவுந்திரராஜனும் தேர்தல் நடந்தாலும் நடக்கலாம், நடக்காமாலும்போகலாம். என்று செய்தியாளர்கள் பேட்டியில் மறைமுகமாக கூறினார். அதனால்தான் இந்த இருதரப்பினரும் தேர்தலைப்பற்றி டென்சன் இல்லாமல் இருந்திருக்கிறார்கள்.

வேறு ஏதேனும் தகவல்.........!

வருகிற நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. அ.தி.மு.க.கூட்டணி அமைவது உறுதி என்றாலும் அமாவாசை தினமான கடந்த 5தேதி அன்று பிள்ளையார் சுழி போட்டு கூட்டணி





பேச்சுவார்த்தையை தொடங்கி இருந்தலும் பா.ஜ.க. மாநில தலைவர் தமிழிசை சவுந்திரராஜன், மத்திய அமைச்சர் பொன்னார் ஆகியோர் முதல்வர். எடப்பாடியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள் என்று வெளியில் சொல்லப்பட்டாலும் சந்திப்பின் பிண்ணனி கூட்டணிக்கான அச்சாரம் என்றே பேசப்படுகிறது.

ஓகோ!...!

ரஜினி கதை என்னாச்சு! என்று நாம் வினவியத்ற்கு மன்றத்தில் தொடர்ந்து பிரச்சினை வெடித்து கொண்டுதான் இருக்கிறது லைக்காவில் பணியாற்றிய ராஜீ மகாலிங்கம் ரஜினி ரசிகர் மன்றம் மக்கள் மன்றமாக மாறியதும் முதலில் பொறுப்புக்கு வந்தவர். தொடர்ச்சியான புகார்கள் மகாலிக்கம் மீது எழுந்ததால் ரஜினி அவரிடம் நான் அழைக்கும் வரை மண்டபம் வரபேண்டாம் என கூறிவிட்டார். அவருக்கு பின் உள்ளே டாக்டர். இளவரசன் வந்தார் இவர் மீதும் ஏகப்பட்ட புகார்கள் வரிசை கட்டின நிலையில் இனவாசனுக்கு துணையாக தூத்துகுடி மன்ற மா.செ.ஸ்டாலின் நியம்மிக்கபட்டார். இவர்கள் இருவர் தவிர மூன்றுக்கு மேற்கு வங்க மாநிலத்தில் ஐ.பி.எஸ் அதிகாரியாக பணிபுரிந்து எதோ சிக்கலில் மாட்டி பதிவியை பாதியிலேயே கைகழுவிலிபட்டு ரஜினிக்கு நண்பர் மன்ற பணிகள் கவனக்கும் பொறுப்பை எற்று கொண்ட ராஜசேகர் என்பவர். ரஜினி மன்றத்தில் நடந்த சேர்த்தல், நீக்கல் எல்லாவற்றுக்கும் ராகசேகன்தான் காரணம். இவை அனைத்தும் ரஜினியின் கவனத்துக்கு சென்ற நிலையில் ராஜசேகரை அழைத்து நீங்க மூன்று பேருமே நான் சொல்லும் வரை மண்டபம் பக்கம் வர வேண்டாம் என்று ஆர்டர் போட்டுவிட்டு அமெரிக்கா சென்று விட்டார் இளவாசனும் ஸ்டாலினும் தங்கள் வேலையைப் பார்க்க சென்றுவிட்ட நிலையில் ராஜ்சேகர் மட்டும் ரஜினி பேச்சை மீறி மன்றத்துக்குள் கலகம் செய்து வருகிறாராம். அப்படியா!

ஆம் ஏற்கனவே இளவரசன் என்னென்ன செய்தாரோ அதையே தற்போது ராஜசேகரும் செய்துவரும் நிலையில் ஆத்திரத்தில் இருக்கும் மன்றத்தினர் ரஜினி சென்னை திரும்பியதும் ராஜசேகர் மீது புகார் கொடுக்க முடிவு செய்திருக்கிறார்கள். என்று கூறிப்விட்டு உங்களிடம் பேசியதில் அலுவலகம் செல்ல நேரம் ஆகிவிட்டது வருகிறேன் என்று விடைபெற்றார் கபலிகான்.



- S.சுருதி லட்சுமி
B.Sc. (Psychology)

# அன்று கோரி, இனறு மோடி...
# இந்தியாவின் ஆளுமைகள்!

### கோரி வம்சம்



*1193* : முஹம்மது கோரி
*1206* : குத்புதீன் ஐபக்
*1210* : ஆரம்ஷா
*1211* : அல்தமிஷ்
*1236* : ருக்னுத்தீன் ஷா
*1236* : ரஜியா சுல்தானா
*1240* : மெஹசுத்தீன் பெஹ்ரம்ஷா
*1242* : ஆலாவுத்தீன் மஸூத் ஷா
*1246* : நாஸிருத்தீன் மெஹ்மூத்
*1266* : கியாசுத்தீன் பில்பன்
*1286* : ரங்கிஷ்வர்
*1287* : மஜ்தன்கேகபாத்
*1290* : ஷம்ஷீத்தீன் கேமரஸ்
(கோரி வம்ச ஆட்சி முடிவு 97 வருடம்)

### கில்ஜி வம்சம்

*1290* : ஜலாலுத்தீன் பெரோஸ் கில்ஜி
*1292* : அலாவுதீன் கில்ஜி
*1316* : ஷஹாபுதீன் உமர் ஷா
*1316* : குதுபுத்தீன் முபாரக் ஷா
*1320* : நாஸிருத்தீன் குஸ்ரு ஷா
( கில்ஜி வம்ச ஆட்சி முடிவு 30 வருடம்)

### துக்ளக் வம்சம்



*1320* : கியாசுத்தீன் துக்ளக்
*1325* : முஹம்மது பின் துக்ளக்
*1351* : பெரோஸ்ஷா துக்ளக்
*1388* : கியாசுத்தீன் துக்ளக்
*1389* : அபுபக்கர்ஷா
*1389* : மூன்றாம் முஹம்மது துக்ளக்
*1394* : அலெக்சாண்டர் ஷா
*1394* : நாஸிருத்தீன் ஷா
*1395* : நுஸ்ரத் ஷா
*1399* : நாஸிருத்தீன் முஹம்மது ஷா.
*1413* : தவுலத் ஷா
(துக்ளக் வமிச ஆட்சி 94வருடம்)

### சையித் வம்சம்

*1414* : கஜர்கான்
*1421* : மெஹசுத் தீன் முபாரக் ஷா
*1434* : முஹம்மது ஷா
*1445* : அலாவுதீன் ஆலம் ஷா
(சையத் வம்சம் 37 வருடம்)



### லோதி வம்ச ஆட்சி

*1451* : பெஹ்லூல் லோதி
*1489* : அலெக்சாண்டர் லோதி
*1517* : இப்ராஹிம் லோதி
(லோதி ஆட்சி 75 வருடம்)

### முகலாயர் ஆட்சி

*1526* : ஜஹிருத்தீன் பாபர்
*1530* : ஹிமாயூன்

### சூரி வம்ச ஆட்சி



*1539* : ஷேர்ஷா சூரி
*1545* : அஸ்லம் ஷா சூரி
*1552* : மெஹ்மூத் ஷா சூரி
*1553* : இப்றாஹிம் சூரி
*1554* : பர்வேஸ் ஷா சூரி

*1554* : முபாரக் கான் சூரி
*1555* : அலெக்சாண்டர் சூரி
*(16வருடம் சூரி ஆட்சி)*



**முகலாயர் ஆட்சி**

*1555* : ஹிமாயூன்
*1556* : ஜலாலுத்தீன் அக்பர்
*1605* : ஜஹாங்கீர் சலீம்
*1628* : ஷாஜஹான்
*1659* : ஔரங்கசீப்
*1707* : ஷாஹே ஆலம்
*1712* : பஹதூர் ஷா
*1713* : பஹாரோகஷேர்
*1719* : ரேபுதாராஜத், நேகஷ்யார்–மெஹ்மூத் ஷா
*1754* : ஆலம்கீர்
*1759* : ஷாஹேஆலம்
*1806* : அக்பர் ஷா
*1837* : பஹதூர்ஷா ஜஹபர்
*(முகலாயர் ஆட்சி 315 வருடம் )*



**ஆங்கிலேயர் ஆட்சி**

*1858* : லார்டு கேங்க்
*1862* : லார்டு ஜேம்ஸ்பரோஸ்எல்ஙன்
*1864* : லார்ட் ஜான் லோதேநஷ்
*1869* : லார்டு ரிசர்டு
*1872* : லார்டு நோடபக்
*1876* : லார்டுஎட்வர்ட்
*1880* : லார்ட் ஜார்ஜ் ரிப்பன்
*1884* : லார்டு டப்ரின்
*1894* : லார்டு ஹேஸ்டிங்



*1899* : ஜார்ஜ்கர்னல்
*1905* : லார்டு கில்பர்ட்
*1910* : லார்டு சார்லஸ்
*1916* : லார்ட் பிடரிக்
*1921* : லார்ட் ரக்ஸ்
*1926* : லார்ட் எட்வர்ட்
*1931* : லார்ட் பெர்மேன்வெலிங்டன்
*1936* : லார்டு ஐ கே
*1943* : லார்டு அரக்பேல்
*1947* : லார்டு மவுண்ட்பேட்டன்
*(ஆங்கிலேயர்கள் ஆட்சி முடிவு)*



**சுதந்திர இந்தியாவின் ஆட்சி**

*1947* : ஜவஹர்லால் நேரு
*1964* : குல்சாரிலால் நந்தா
*1964* : லால் பகதூர் சாஸ்திரி
*1966* : குல்சாரிலால் நந்தா
*1966* : இந்திராகாந்தி
*1977* : மொராஜி தேசாய்
*1979* : சரண்சிங் *1980*:இந்திராகாந்தி
*1984* : ராஜீவ்காந்தி
*1989* : V P சிங்
*1990* : சந்திரசேகர்
*1991* : P.V. நரசிம்மராவ்
*1996* : A.B.வாஜ்பாய் 13 நாள் ஆட்சி
*1996* : A.J. தேவகௌடா
*1997* : I.K.குஜ்ரால்
*1998* : A.B.வாஜ்பாய்
*2004* : மன்மோஹன்சிங்
*2014* : நரேந்திர மோடி





## சம்பளமில்லா பாதுகாவலன், கணவன்!

கணவன் என்றால் பணிக்குச் சென்று மனைவி, குழந்தை, குடும்ப பொறுப்புகள் அனைத்தையும் சுமக்கும் சுமைதாங்கி. பணிசெய்யும் இடத்திலும் வேலைச் சுமை, வீட்டில் மனைவி, குழந்தை, பெற்றோர் ஆகிய அனைவரின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய கடமைச் சுமை கணவனுக்கு உண்டு. ஆண் என்பவன் ஆள்பவன்தான் என்றாலும் அலுவலகத்தில் பணியாள்தான். வீட்டிலும் பணியாள்தான்.

மனைவியரே கொஞ்சம் கை கொடுங்கள். உயிருள்ளவரைஉங்களை சுமந்து செல்லும் அந்த வாகனத்தைபத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் மனைவியரே, அவனுடைய சுமைகளை சற்று நேரம் இறக்கிவைத்து இளைப்பாறும் இனியவார்த்தைகளின் நிழலைத் தாருங்கள்.

மனைவிக்கு நலமில்லையென்றாலும் குழந்தைக்கு நலமில்லை யென்றாலும் நேரம் காலம் பார்க்காமல், சோர்வைப் பாராமல் மருத்துவரிடம் சுமந்து செல்லும் கணவனைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் மகளையும் மகனையும் கவனிப்பது போல் உங்கள் கணவனையும் கவனித்துக் கொள்ளுங்கள். உடல் மனம் இரண்டையும் மென்மைப் படுத்துங்கள்

பணிமுடிந்து களைத்துப்போனாலும் வரும் வழியில், பால் வேண்டுமா, காய் வேண்டுமா, வேறு ஏதேனும் வேண்டுமா என்று பரிவோடு கேட்கின்ற கணவனைப் பாராட்டுங்கள்.

ஓய்வுபெறும் நாள்வரை அனைவருக்காகவும் உழைத்து, ஓய்வு பெற்ற பிறகும் வீட்டுப்பணியை ஓய்வின்றி செய்கின்ற கணவனுக்குதினமும் உங்கள் மடியில் சிறிது நேரம் ஓய்வு கொடுங்கள்.

அவன் குடும்பத்துக்காககரைந்துபோகின்ற ஒருமெழுகுவர்த்தி.வாழ்க்கை முழுதும் கூடவே வருகின்ற ஒரு சம்பளமில்லா பாதுகாவலன் கடவுள் உன்னுடன்இருக்கமுடியாது என்பதற்காக அனுப்பிவைத்த காவலன்தான் கணவன். அவன் கண்களில் சோர்வுவராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

மூன்றாவது கையாக நீங்கள் இருங்கள். கணவன் கலங்கும் நேரம் வந்துவிட்டால் அங்கே செல்வம் தங்காது புரிந்து கொள்ளுங்கள்.

# பலன்தரும் பரிகாரத் தலங்கள்



**கடன் பிரச்சினைகள் தீர..**

1. அருள்மிகு. அன்னமலை தண்டாயுதபாணி திருக்கோவில், மஞ்சூர், ஊட்டி
2. அருள்மிகு. கருமாரியம்மன் திருக்கோவில், திருவேற்காடு.
3. அருள்மிகு. சாரபரமேஸ்வரர் திருக்கோவில், திருச்சேறை, கும்பகோணம்.
4. அருள்மிகு. சிவலோகதியாகர், நல்லூர் பெருமணம், ஆச்சாள்புரம், சீர்காழி.
5. அருள்மிகு. திருமலைதிருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோவில், திருமலை.

**ஆயுள் பலம் வேண்டுதல்..**

1. அருள்மிகு. அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில், திருக்கடையூர்,
2. அருள்மிகு. எமனேஸ்வரமுடையார் திருக்கோவில், எமனேஸ்வரம், பரமக்குடி
3. அருள்மிகு. காலகாலேஸ்வரர் திருக்கோவில், கோவில்பாளையம்,
4. அருள்மிகு. சித்திரகுப்தசுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம்.
5. அருள்மிகு. தண்டீஸ்வரர் திருக்கோவில், வேளச்சேரி
6. அருள்மிகு. ஞீலிவனேஸ்வரர் திருக்கோவில். திருப்பைஞ்ஞீலி.
7. அருள்மிகு. வாஞ்சிநாதசுவாமி திருக்கோவில், வாஞ்சியம்.

**ஆரோக்கியத்துடன் வாழ..**

1. அருள்மிகு. தன்வந்திரி திருக்கோவில், ராமநாதபுரம், கோவை.
2. அருள்மிகு. பவஔஷதீஸ்வரர் திருக்கோவில், திருத்துறைப்பூண்டி.
3. அருள்மிகு. பிரசன்னவெங்கடேச பெருமாள் திருக்கோவில், குணசீலம்.
4. அருள்மிகு. மருந்தீஸ்வரர் திருக்கோவில், திருவான்மியூர்.
5. அருள்மிகு. மகா மாரியம்மன் திருக்கோவில், வலங்கைமான்.
6. அருள்மிகு. வைத்தியநாதசுவாமி திருக்கோவில், மடவார்விளாகம், ஸ்ரீவில்லிபுத்தூர்.
7. அருள்மிகு. வைத்தியநாதசுவாமி திருக்கோவில், வைத்தீஸ்வரகோவில்.

**கல்வி வளம் பெருக...**

1. அருள்மிகு. கரிவரதராஜ பெருமாள் திருக்கோவில், மாதவரம்.
2. அருள்மிகு. தேவநாதசுவாமி திருக்கோவில், திருவந்திபுரம், கடலூர்.
3. அருள்மிகு. மகாசரஸ்வதி அம்மன், கூத்தனூர். பூந்தோட்டம்.
4. அருள்மிகு. வரதராஜப்பெருமாள் திருக்கோவில், செட்டிபுண்ணியம்.


**குழந்தைப்பேறு அடைய...**

1. அருள்மிகு. ஏகம்பரநாதர் திருக்கோவில், காஞ்சிபுரம்.

2. அருள்மிகு. சங்கரராமேஸ்வரர் திருக்கோவில், தூத்துக்குடி.
3. அருள்மிகு. சிவசுப்ரமண்யசுவாமி திருக்கோவில், குமாரசாமிப்பேட்டை, தர்மபுரி.
4. அருள்மிகு. தாயுமானசுவாமி திருக்கோவில், மலைக்கோட்டை, திருச்சி.
5. அருள்மிகு. பாலசுப்ரமணியசுவாமி திருக்கோவில், ஆயக்குடி, தென்காசி.
6. அருள்மிகு. மயூரநாதசுவாமி திருக்கோவில், பெத்தவநல்லூர், ராஜபாளையம்.
7. அருள்மிகு. முல்லைவனநாதசுவாமி திருக்கோவில், திருக்கருகாவூர்.
8. அருள்மிகு. நச்சாடை தவிர்தருளியசுவாமி திருக்கோவில், தேவதானம், ராஜபாளையம்.
9. அருள்மிகு. விஜயராகவப்பெருமாள் திருக்கோவில், திருபுட்குழி.

**குடும்பத்தில் ஒற்றுமை ஓங்க...**

1. அருள்மிகு. அகத்தீஸ்வரர் திருக்கோவில், வில்லிவாக்கம்.
2. அருள்மிகு. அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில், திருச்செங்கோடு.
3. அருள்மிகு. அங்காளம்மன் திருக்கோவில், முத்தனம்பாளையம்.திருப்பூர்
4. அருள்மிகு. கல்யாணவிகிர்தீஸ்வரர் திருக்கோவில், வெஞ்சமாங்கூடலூர்.
5. அருள்மிகு. சங்கரநாராயண சுவாமி திருக்கோவில், சங்கரன்கோவில்.
6. அருள்மிகு. நவநீதசுவாமி திருக்கோவில், சிக்கல்.
7. அருள்மிகு. பள்ளிக் கொண்டீஸ்வரர் திருக் கோவில், ஊத்துக்கோட்டை, சுருட்டப்பள்ளி.
8. அருள்மிகு. மனிஹடா ஹெத்தையம்மன் நாகராஜா திருக்கோவில், மஞ்சக்கம்பை.
9. அருள்மிகு. மாரியம்மன், காளியம்மன் திருக்கோவில், ஊட்டி
10. அருள்மிகு. லட்சுமி நரசிம்மர் திருக்கோவில், பரிக்கல்.
11. அருள்மிகு. வெக்காளியம்மன் திருக்கோவில், உறையூர்
12. அருள்மிகு. ஸ்தலசயனப்பெருமாள் திருக்கோவில், மாமல்லபுரம்.



**செல்வ வளம் சேர...**

1. அருள்மிகு. அனந்தபத்மநாபசுவாமி திருக்கோவில், அடையாறு.
2. அருள்மிகு. அஷ்டலட்சுமி திருக்கோவில், பெசன்ட்நகர், சென்னை.
3. அருள்மிகு. கைலாசநாதர் திருக்கோவில், தாரமங்கலம்.
4. அருள்மிகு. பக்தவச்சலப்பெருமாள் திருக்கோவில், திருநின்றவூர்.
5. அருள்மிகு. மாதவப்பெருமாள் திருக்கோவில், மயிலாப்பூர்.

**திருமணத்தடைகள் நீங்க...**

1. அருள்மிகு. உத்வாகநாதசுவாமி திருக்கோவில், திருமணஞ்சேரி.
2. அருள்மிகு. கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோவில், கரூர்.
3. அருள்மிகு. கல்யாணவேங்கடரமணசுவாமி திருக்கோவில், தான்தோன்றிமலை.
4. அருள்மிகு. கைலாசநாதர் திருக்கோவில், தாரமங்கலம்.
5. அருள்மிகு. சென்னமல்லீஸ்வரர், சென்னகேசவ பெருமாள் திருக்கோவில், பாரிமுனை.
6. அருள்மிகு. பட்டீஸ்வரர் திருக்கோவில், பேரூர். கோவை.
7. அருள்மிகு. நித்யகல்யாண பெருமாள் திருக்கோவில், திருவிடந்தை.
8. அருள்மிகு. வரதராஜபெருமாள் திருக்கோவில், நல்லாத்தூர்.
9. அருள்மிகு. வீழிநாதேஸ்வரர் திருக்கோவில், திருவீழிமழலை.

**தீவினைகள் அகன்றிட..**

1. அருள்மிகு. காலபைரவர் திருக்கோவில், குண்டடம்.
2. அருள்மிகு. காளிகாம்பாள் திருக்கோவில், தம்புசெட்டி தெரு, சென்னை.
3. அருள்மிகு. குறுங்காலீஸ்வரர் திருக்கோவில், கோயம்பேடு.
4. அருள்மிகு. சரபேஸ்வரர் திருக்கோவில், திருபுவனம்.
5. அருள்மிகு. சிங்காரத்தோப்பு முனீஸ்வரர் திருக்கோவில், நடுப்பட்டி, மொரப்பூர்.
6. அருள்மிகு. பண்ணாரிமாரியம்மன் திருக்கோவில், பண்ணாரி.

தொடரும்...

# காபி கோப்பை உணர்த்தும் உண்மைகள்!



ஒரு நாள் தங்கள் துறையில் உயர்ந்த நிலையை எட்டி ஜொலித்துக் கொண்டிருக்கும் அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தங்கள் முன்னாள் பேராசிரியரை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது வாழ்க்கையிலும், செய்யும் வேலையிலும் ஏற்படும் மன அழுத்தம் பற்றி பேச்சு திசை திரும்பியது. வாழ்க்கை இயந்திரத் தனமாகவும் அமைதி இன்றியும் மன உளைச்சலைத் தரக் கூடியதாகவும் உள்ளது என ஆதங்கப் பட்டனர்.

திடீரென்று சமையலறைக்குச் சென்ற பேராசிரியர் சிறிது நேரம் கழித்து ஒரு பாத்திரத்தில் நிறைய காபி கொண்டுவந்து வைத்தார்.

கூடவே காபி குடிப்பதற்காக விதம் விதமான கோப்பைகளையும் கொண்டு வந்தார். அவற்றில் 'வெள்ளி, பீங்கான்', போன்ற விலை உயர்ந்த கோப்பைகள் முதல் 'கண்ணாடி பிளாஸ்டிக், காகிதம்' போன்ற சாதாரண கோப்பைகள் வரை பல வகைகள் இருந்தன.

அனைவரையும் அழைத்து கோப்பைகளை எடுத்துக்கொண்டு நீங்களே காபியையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று பேராசிரியர் கூற வந்திருந்தவர்கள் விலை உயர்ந்த கோப்பைகளை முதலில் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

மிக விலை உயர்ந்தவை மற்றும் அழகான கோப்பைகள் எடுக்கப் பட்டுவிட அடுத்து வந்தவர்களுக்கு சாதாரண கோப்பைகளே கிடைத்தன. மிகச் சாதாரண கோப்பைகள் யாராலும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. அனைவரும் தங்களுக்கு கிடைத்த கோப்பையில் காபி எடுத்துக் கொண்டனர்

இப்போது பேராசிரியர் பேசலானார், "உங்கள் கைகளில் உள்ள கோப்பைகளைப் பாருங்கள். உங்களுக்கு மிகச் சிறந்தது வேண்டுமென்று விரும்புகிறீர்கள் .

கிடைக்காத பட்சத்தில் கிடைத்ததில் சிறந்ததை தேர்ந்தெடுக்கிறீர்கள். அது இயல்புதான் என்றாலும் அவைதான் மன அழுத்தம், ஏமாற்றம் போன்ற பிரச்சினைகளுக்குக் காரணம். சிந்தித்துப் பாருங்கள்.

கோப்பை எத்தனை விலை உயர்ந்ததாக இருந்தாலும் அவை காபியின் தரத்தை மாற்றப் போவதில்லை.விலை குறைந்ததாக இருந்தாலும் காபியின் சுவை குறைந்து விடப் போவதில்லை. உண்மையில் சொல்லப் போனால் சில கோப்பைகளில் உள்ளே என்ன உள்ளது என்பது கூடத் தெரியாது. களைத்துப் போய் இருக்கும் நேரத்தில் நம் தேவை காபிதான். ஆனால் நாமோ கோப்பைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

அது மட்டுமல்ல. நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்தவர் கையில் என்ன கோப்பை இருக்கிறது என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அடுத்தவரிடம் உள்ளது விலை உயர்ந்தது என்றால் நமக்கு அது கிடைக்கவில்லையே என்ற வருத்தமும், அது சாதரணமானது என்றால் உங்களுக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சியும் அடைந்திருப்பீர்கள்.

வாழ்க்கையும் காபி போன்றதுதான். பதவி பணம் அந்தஸ்து போன்றவை கோப்பைகளாகும். அவை வாழ்க்கைக்கு உதவும் வெறும் கருவிகளே. அவை வாழ்க்கை ஆகிவிடாது.

கோப்பையின் மீது நாம் செலுத்தும் அதீத கவனத்தால் காபியின் சுவையை நாம் அனுபவிக்கத் தவறி விடுகிறோம். கோப்பையை ஒதுக்கி காபியை பாருங்கள்.

மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் எல்லாவற்றிலும் சிறந்ததை பெற்றிருப்பதில்லை. தாம் பெற்றிருப்பதை சிறந்ததாகக் கருதுகிறார்கள். அதனால் அவர்களை கவலைகளும் அழுத்தங்களும் அதிகமாக நெருங்குவதில்லை. "எளிமையாக வாழுங்கள்! கருணையுடன் பேசுங்கள் எல்லோரையும் நேசியுங்கள்! வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்" என்றார் பேராசிரியர்..

உண்மைதானே!

– ஆஷிக்

# ★ வாழ்வில் புதிய திருப்பம் ★

**இப்போதைய பணியில். விரும்பிய வளர்ச்சி கிடைத்ததா?**
**சிந்தனையை. திட்டத்தை மாற்றுங்கள்.**
**பகுதிநேரமாக சிறிய அளவில்..**

# ஏற்றுமதி

**வணிகம் தொடங்கி. திட்டமிட்டு பணியாற்றி. நீங்கள் விரும்புவதைவிட அதிகமாக உயர்வை உறுதியாக அடையுங்கள்.**

**பகுதி நேரம் போதும் - முதலீடு வேண்டாம்**







★ இந்திய அரசின் பல்வேறு கட்டங்களில் முழு ஆதரவும், பணச் சலுகைகளும் பெறலாம் ★

# அகிலம்

**வெளிநாட்டு வணிகப் பயிற்சியகம்**

15 Karpaganagar 8th Street, K.Pudur, Madurai-625007
Ph: 93605 48776 / 93641 52569

*AGILAM :THE FIRST AND BEST BRAND IN INDIA FOR EXPORT TRANINIG *




# வெளிநாட்டு வணிகம்

இதைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்போது வந்ததோ, அப்போதே நீங்கள் இதில் பெரிதும் ஆர்வம் உள்ளவர் என்பதை உங்களை அறியாமலே நிரூபிக்கிறீர்கள். மேலும் இந்தத் துறையில் ஈடுபட்டு வெற்றிபெற வாய்ப்பு உள்ளதா என்றும் யோசிக்கிறீர்கள். என்பது தானே உண்மையான அர்த்தம் – இல்லையா, நீங்களோ, உங்களைச் சேர்ந்த உறவினர்களோ, நண்பர்களோ, பழகியவர்களோ யார் வேண்டுமானாலும் வெளிநாட்டு வணிகத்துறையில் நுழைந்து உறுதியாக சாதிக்க முடியும். நீங்களும் உயர்ந்து மற்றவர்களுக்கும் ஒரு முன் மாதிரியாக திகழலாம்.

உங்களது வயது, படிப்பு, பொருளாதார வசதி, தற்போதைய உங்களது பணி, நீங்கள் வசிக்கும் ஊர் நகரமோ, கிராமமோ, உங்களது பின்னணி எதுவுமே முக்கியமில்லை என்பது முற்றிலும் உண்மை. இதை நிரூபித்தவர்கள் பல்லாயிரம் பேராகும். வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ வேண்டும். முத்திரை பதிக்க வேண்டும். நாமும் நமது சந்ததியும் உயர வேண்டும் என்ற துடிப்பும், வைராக்கியமும் மன உறுதியும் மட்டுமே தேவையான தகுதிகள். தவிரவும் இந்தியாவின் குடிமகன் என்ற ஒரே தகுதிதான் தேவை. இதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.


அகிலம் என்.ஏ.எஸ். ஜெயபாலன்

உங்களது இப்போதைய பின்னணியில் பள்ளியில் / கல்லூரியில் படிப்பவராகவோ, அரசு அல்லது தனியார் துறையில் பணிபுரிபவரோ, அல்லது பணியிலிருந்து ஓய்வு பெற்றவரோ, சொந்தமாக தொழில் அல்லது வணிகம் செய்பவரோ, வணிகர், வக்கீல், டாக்டர், எஞ்சினியர், ஆடிட்டர் போன்ற சொந்த தொழில் செய்பவரோ, விவசாயம், வணிகம், உற்பத்தி துறைகளில் இருப்பவரோ – மொத்தத்தில் எந்த பின்னணியில் இருந்தாலும் அதுவெல்லாம் ஒரு பொருட்டல்ல. அதில் எந்த வகையிலும் சமரசம் செய்ய வேண்டாம். அதன் போக்கில் அது போய்க்கொண்டே இருக்கட்டும். பகுதிநேரப்பணி முற்றிலும் போதும்.

வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டு சாதிக்கலாமா என்ற மனநிலை மட்டும் போதும். இதை முற்றிலும் நீங்கள் நம்ப வேண்டும். வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட பெரிய / சிறிய முதலீடு அவசியமே இல்லை என்ற உண்மையைப் புரிந்து கொண்டு, தொடங்கி சாதித்தவர்கள் பல்லாயிரம் பேர் என்ற ஆதாரபூர்வமான உண்மையை நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். உங்களால் முதலீடு செய்ய முடிந்தாலும் கூட, முதலீடு இல்லாமலே வெற்றிபெற முயற்சித்து வெற்றி பெறுவதே புத்திசாலித்தனம்.

ஆரம்பத்தில் தினசரி தவறாமல் குறைந்தபட்சம் ஒருமணிநேரம் வெளிநாட்டு வணிகப் பணிகளுக்காக நேரத்தை ஒதுக்கிக் கொண்டால் அதுவே போதும். முடிந்தால் நேரத்தை அதிகப்படுத்திக் கொள்ளலாம். கூடுமானவரை அது குறிப்பிட்ட ஒரே நேரமாக இருப்பது மிகவும் நல்லது. இரவு நேரம் என்றால் மிக மிக நல்லது. இதை தவறாமல் முழுமையாக பின்பற்ற வேண்டும். அது முடியாது என்றால் நீங்கள் மேற்கொண்டு யோசிப்பதில் பயனில்லை. முழுமையான கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டிய சூழல் மிக மிக அவசியமாகும்.

முதலில் வெளிநாட்டு வணிகத்துறையில் உள்ள நிலவரம் என்ன என்பதை முற்றிலும் நன்கு புரிந்து கொண்டு, தெரிந்து கொண்டு அதன் பின்னர் உங்களுக்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தத் தொடங்கினால் உங்களது வெற்றியை தடுக்கும் சக்தி உலகில் எங்கும் இல்லை என்பது முற்றிலும் உண்மை. அந்த வெற்றியை உறுதியாக அடைவதற்கு இந்தக் கட்டுரைத் தொடர் கண்டிப்பான உறுதுணையாக இருக்கும் என்பதில் துளியும் சந்தேகம் வேண்டாம். வெற்றியை உறுதியாக்கிய பின்னர் இதை கண்டிப்பாக உணர்வீர்கள். நிச்சயம்.

வெளிநாட்டு வணிகம் சிறிய அளவில், புதிதாக தொடங்கும் யாருக்கும் தனியே அலுவலகமோ அல்லது பணியாளர்களோ அவசியமே இல்லை. நீங்கள் வளர்ந்த பின்னர் அதை உங்கள் விருப்பப்படி பார்த்துக் கொள்ளலாம். எனவே இப்போது உங்கள் வீடு சிறிதோ பெரிதோ அது முக்கியமில்லை. நீங்கள் உட்கார்ந்து பணியாற்ற இருக்கும் இடம் தாராளமாகப் போதும். பிறரது தொந்தரவு இல்லாமல் உங்களது முழு கவனத்தையும் வெற்றியை நோக்கிச் செயல்படுத்த வேண்டும். வெற்றி என்ற இலக்கை மட்டுமே நோக்கிய ஒரே கவனம் வேண்டும்.

நிதிவசதி முதலீடு என்று பெரிதாக எதுவும் தேவையில்லை என்பதை முழுமையாக நம்புங்கள். தெரிந்தோ, தெரியாமலோ உங்களுக்குத் தவறான தகவல்களைத் தர உங்களைச் சுற்றி பலபேர் இருப்பார்கள். அவர்களது அபிப்பிராயங்கள் எல்லாம் வேதவாக்கு அல்ல. அவையனைத்தும் தவறு என்பதை நீங்கள் விரைவில் உணர்ந்து கொள்வீர்கள். உங்களுக்குச் சரி என்று பட்டால் மன உறுதியுடன் செயல்படத் தொடங்குங்கள். தகவல்களை சொல்லும் அளவுக்கு மற்றவர்களுக்கு எந்த தகுதியோ ஆதாரமோ இல்லை என்ற நம்புங்கள்.

உங்களது ஓய்வு நேரம், விடுமுறை நாட்கள் இவைகளை முறையாகப் பயன்படுத்தினால் போதும். நீங்கள் ஒருவராகவே வெளிநாட்டு வணிகம் தொடங்கி ஒருவராகவே செயல்பட்டு உறுதியாக வெற்றி பெற நிச்சயம் முடியும். இவ்வாறுதான் பல்லாயிரம் பேர் தொடங்கி வெற்றிபெற்று படிப்படியாக வளர்ந்து பெரிதாக சாதித்திருக்கிறார்கள் என்பது முற்றிலும் உண்மை. ஆரம்பித்த யாருமே உடனே இமயமலை உயரத்துக்கு வளரவில்லை. அனுபவப்பட அனுபவப்பட படிப்படியாக மட்டுமே பெரும் வெற்றியை அடைந்திருக்கிறார்கள்.

நீங்கள் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். பாலின பாகுபாடு வெளிநாட்டு

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 12.08.1946 மறைவு: 21.01.2019

**மித்ரா குருப் ஆஃப் கம்பெனியின்**
**துணை தலைவர் (Vice Predicent)**

திரு. **ஜி.இராம்மோகன்** அவர்கள்

**திங்கள் இரவு (21.01.2019) அன்று இயற்கை ஏய்தினார் என்பதை வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள்
**மித்ரா குருப் ஆஃப் கம்பெனிஸ்**

வணிகத்தில் முக்கியமில்லை. உண்மையில் ஏராளமான பெண்கள் சிறிய அளவில் தொடங்கி படிப்படியாக பெரிதாக வளர்ந்திருக்கிறார்கள் என்று போதிய ஆதாரங்கள் மூலம் அறியலாம். வெளிநாட்டு வணிகத்தில் வீட்டில் அமர்ந்து கொண்டு செய்ய வேண்டிய பணிகள்தான் ஏராளம். அலைந்து திரிந்து செய்யவேண்டிய பணிகள் மிக மிகக் குறைவு. அதுவும் ஆரம்ப காலத்தில் மட்டும் அது தேவைப்படும். போகப்போக அது குறைந்து கொண்டு வரும் என்ற உண்மைகளை புரிந்து கொள்ளுங்கள். எனவே பாலினம், வயது கல்வி இவைகளெல்லாம் முக்கியமேயில்லை.

வெளிநாட்டு வணிகம் செய்யலாம் என்று உறுதியாக முடிவெடுத்தபின், செயலில் இறங்குபவர்கள் சாதாரணமாக மூன்று மாதங்களுக்குள் (90 நாட்களில்) கண்டிப்பாக வெற்றிபெற முடியும். இது முற்றிலும் உண்மை மட்டுமல்ல – இதை நிரூபித்தவர்கள் பல்லாயிரம் பேர் என்பதை புரிந்து கொள்ளுங்கள். தற்போதைய வேலையை விட்டுவிட்டும் பல லட்சம் ரூபாய்கள் கஷ்டப்பட்டு முதலீடு செய்தும் செயல்பட்டால் ஒருவரது மனநிலை எப்படி இருக்குமோ அந்த மனநிலையை வரவழைத்துக் கொள்ள வேண்டும். சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு உடையவர்களக்கு மூன்று மாத காலம் கூட அதிகம் என்ற

உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் கூட வெற்றிபெற முடியும்.

வணிகம் என்று சொன்னால் அதில் இரு பிரிவு இருக்கிறது. உள்நாட்டு வணிகம் இரண்டையும் ஒன்றுபோல நினைப்பது மாபெரும் தவறாகும். வெளிநாட்டு வணிகத்துக்கு உண்டான ஏராளமான சிறப்புகள் உண்டு. தவிரவும் வெளிநாட்டு வணிகத்திலும் இரு பிரிவு உண்டு. அவை ஏற்றுமதியும், இறக்குமதியும் ஆகும். இரண்டுக்கும் ஒரே மாதிரியான விதிமுறைகள், நடைமுறைகள், சட்டதிட்டங்கள், லைசென்ஸ் வாங்கும் முறைகள் இருந்தாலும் இரண்டும் எதிரும் புதிருமானவை என்பது முக்கியம். அரசின் முழு உதவிகள் ஏற்றுமதிக்கு ஏராளம் உண்டு. இறக்குமதிக்கு எந்த உதவியும் இல்லை.

நமது நாட்டைப் பொறுத்தவரை இன்றைய சூழ்நிலையில் ஏற்றுமதி வணிகம் செய்யவும். இறக்குமதி வணிகம் செய்யவும் இரண்டுக்குமே வரம்பு மீறிய வாய்ப்புகள் உள்ளன என்பது புள்ளிவிபரங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். மேலும் மொத்தத்தில் வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கை நமது நாட்டில் கவலைப்பட வேண்டிய அளவுக்கு மிகமிகக் குறைவானர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்தத் துறையில் இப்போது இந்தியாவில் போட்டி என்பது மற்ற நாடுகளை ஒப்பிடும்போது மிகக் குறைவு. இந்த நிலவரம் விரைவில் மிகப்பெரிய மாற்றத்தை சந்திக்கும்.

எனவே இந்தியர்களாகிய நாம் இந்தத்துறையில் முயற்சி அடிப்படையில் ஈடுபட்டால் நமது வீட்டிலும் மாபெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி நாட்டு முன்னேற்றத்துக்கும் நாம் காரணமாக உருவாகலாம். அதன் மூலம் அரசு நமக்கு வழங்கும் கவுரவம். அந்தஸ்து, வெற்றி பெறுவதற்கான வழிவகைகள், பல்வேறு பணச் சலுகைகள் அனைத்தையும் பெற்று சமுதாயத்தில் மாபெரும் உயர்வை அடையலாம். கல்வித் தகுதி குறைவு என்றால் நிச்சயமாக அது ஒரு தடையே இல்லை. கம்ப்யூட்டர் அறிவு அனுபவம் குறைவு என்றாலும் அதுவும் கட்டாயம் ஓர் தடையே இல்லை. ஓரிரு அல்லது ஒரு நாளில் கம்ப்யூட்டரை பயன்படுத்துவது பற்றிக் கற்றுக் கொள்ளலாம். கண்டிப்பாக அது சிரமமானதே இல்லை.

இந்தத் தொடர் கட்டுரையில் சொல்லப்படும் வழிமுறைகளை தவறாமல் பின்பற்றி செயல்பட்டால் உங்கள் வெற்றி உறுதி என்பதை இப்போதே குறித்து வைத்துக் கொள்ளலாம். மாற்றங்களை விரும்பினால் முதலில் மாற்றங்களுக்குத் தயாராக வேண்டும். எனவே சினிமா, டிவி, அரசியல், விளையாட்டு, நண்பர்களுடன் அரட்டை, ஊரைச் சுற்றுதல், படுத்துப்படுத்து தூங்குதல் போன்றவைகளை முற்றிலும் தவிர்த்து முன்னேற்றத்துக்கான வழியில் பயணத்தைத் தொடங்கத் தயாராக இருக்க வேண்டும். முன்னேற்றம் வந்தால் விரும்பும் எதை வேண்டுமானாலும் விரும்பியவாறே செய்யலாம். முடிவெடுங்கள்.

மீண்டு சந்திப்போம்.




சேக்கிழார் கல்வி பண்பாட்டுக் கழகம் நடத்திய மார்கழி பெருவிழா நிகழ்ச்சியில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஐயா ஜி.கே.வாசன் அவர்கள், இந்து மக்கள் கட்சி தலைவர் திரு.அர்ஜுன் சம்பத் ஆகியோருடன் 'மித்ரா டைம்ஸ்' ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி

கட்டுமானச் செய்திகள்



# நில விற்பனையில் அரசு வருவாய் உயர்வு! நிலவணிகத்துறை மீள் எழுச்சி பெறும் அறிகுறி!

கடந்த ஆண்டில்இதே எட்டு மாதங்களை ஒப்பிடும்போது நில விற்பனைப்பதிவு வருவாயில் ரூபாய் 1500 கோடி உயர்வு ஏற்பட்டிருப்பது என்பது தமிழ்நாட்டில் மந்தமாக இருந்த நிலவணிகச் சந்தையில் ஒரு மீள் எழுச்சி ஏற்பட்டிருப்பதை அடையாளப்படுத்துகிறது.

பட்டியலிலேயே முதல் இடத்தைப் பிடிக்கும் வகையில் சென்னை மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டியுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களைக் கொண்ட சென்னை மண்டல துணைப்பதிவாளர் அலுவலகங்களில் மாநிலத்தின் மொத்தப் பதிவுகளில் 45% நடைபெற்றிருப்பதாக TOI கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இதுவே கடந்த 2017ஆம் அண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரை ரூ.2600 கோடி என்றிருந்த நிலையில் இருந்து இவ்வாண்டு இதே காலக்கட்டத்தில் ரூ.3100 கோடி வருவாயைக் கொண்டு வந்துள்ளது.

இந்த வருவாயில் பத்திர தபால் தலைக் கட்டணமும் பதிவுக் கட்டணமும் அடக்கம். இந்த ஆண்டு ஏப்ரல் முதலான கடந்த எட்டு மாதங்களில் மாநிலமெங்கும் உள்ள 575 பதிவு அலுவலகங்களில் நிலச்சொத்து விற்பனைகளில் ரூ.7200 கோடி வருவாய் கிடைத்துள்ளது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது இதே காலக்கட்டத்தில் கடந்த ஆண்டு கிடைத்த வருவாயையான ரூ.5750 கோடியை விட கிட்டத்தட்ட ரூ.1500 கோடி உயர்வு ஆகும்.

இதைப்போலவே, கடந்த ஆண்டில் நவம்பர் வரை பதிவு செய்யப்பட்ட 14.6 லட்சம் நிலப் பத்திரங்களை விட இவ்வாண்டு இதே காலக்கட்டத்தில் கிட்டத்தட்ட 17 லட்சம் நிலப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக நிலவணிகச் சந்தை கடும் நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருந்த நிலையில், இநத் முன்னேற்றமானது ஒரு மீள் எழுச்சியைக் காட்டுவதாக நில வணிகர்கள் கூறுகின்றனர்.

பதிவுத்துறை வருவாயில் உயர்வு என்து நிலவணிகச் சந்தையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அறிகுறி என்று இந்திய நில முன்னேற்றுநர்கள் சங்கக் கூட்டமைப்பின் (CREEDAI)சென்னைப் பிரிவு துணைத் தலைவரான எஸ்.ஸ்ரீதரன் குறிப்பிடுகின்றார். விற்பனைப் போக்கில் ஒரு நேர்மறையான மாற்றம் தெரிகிறது.

வாடிக்கையாளர்கள் நில முன்னேற்றுநர்

களுடன் அதிக வியாபாரங்களில் ஈடுபட்டு வருவதை நாங்கள் கண்கூடாகக் காண்கிறோம். விற்கப்படாத வையெல்லாம் விற்பனையாகி அவை குறைந்து வருவதில் இது வெளிப்படுகிறது என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் அம்னஸ்டி திட்டத்தின் கீழ் முறைப்படுத்தப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்படுவதும் இதற்கு மற்றொரு காரணம் என்றும் அவர் கூறுகிறார். 'பதிவுத்துறை வருவாய் உயர்வில் இதற்கு உள்ள முக்கிய பங்கு வெளிப்பட்டுள்ளது' என்று இந்திய கட்டிடம் கட்டும் நிறுவனங்கள் சங்கத்தின் தெற்கு மைய துணைத்தலைவரான இராமப்பிரபு அவர்கள் குறிப்பிடுகிறார்.

பதிவுத்துறை தலைமை ஆய்வாளர் ஜெ.குமரகுருபரனைத் தொடர்பு கொண்டபோது, இந்த நிதியாண்டின் இறுதிக்குள் மொத்த வருவாய் ரூபாய் 10,500 கோடியை தொட்டுவிடக்கூடும் என் குறிப்பிட்டார்.

கடந்த 2017 2018 நிதியாண்டின்போது, பத்திரப்பதிவுத் துறை ரூ.9100 கோடியை வருவாயாகப் பெற்றது பதிவாகியுள்ளது.

## பத்திரப்பதிவு ஆன்லைன் விண்ணப்பம் உடனடி தீர்வு




பதிவுத்துறையில் பத்திரப் பதிவுகளை தொடர்ந்து வில்லங்கச் சான்று, பிரதி ஆவணங்கள் உள்ளிட்ட சேவைக்கான பதிவுகளை ஆன்லைன் முறையில் மேற் கொள்ளும் புதிய சட்டதின் கீழ் அதன் நடைமுறைகள் குறித்து சார்பதிவாளருக்கு பதிவுத்துறை தலைவர் குமரகுருபரன் தனது உத்தரவில், வில்லங்க சான்று கோரும் விண்ணப்பங்கள், கணினிமயமாக்கப்பட்ட பத்திரப்பதிவு தொடர்பான வில்லங்க விவரங்களை மூன்று நாட்களிலும், மற்ற வில்லங்க விவரங்களை நான்கு நாட்களிலும் வழங்க வேண்டும். சான்றிட்ட பிரதி ஆவண நகல் கோரினால் மூன்று நாட்களில் வழங்க வேண்டும்.

ஆன்லைன் முறையில் விண்ணப்பம் பதிவான நாளை தவிர்த்து, இந்த காலவரையை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.


## குடியிருப்பு கட்டுமானங்களுக்கு சலுகைகள்

'தமிழகத்தில் குடியிருப்பு கட்டடங்களுக்கான உயரம், பக்கவாட்டு காலியிடம் தொடர்பான விதிகளில், விரைவில் புதிய சலுகைகள் அறிவிக்கப்படும். என, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமான, சி.எம்.டி.ஏ., உறுப்பினர் செயலர், ராஜேஷ் லக்கானி கூறுகையில்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் அமைப்பு, பொது கட்டட விதிகள் தயாரிப்பு என, பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கட்டடப் வசதிநிலத்தை முழுமையாகப் பயன்படுத்துவது அனைத்து தரப்பு மக்களுக்கும், குறைந்த விலையில் வீடு கிடைக்கச் செய்வது ஆகியவற்றின் அடிப்படையில், வரைவு பொது கட்டட விதிகள் உருவாக்கப்பட்டன. இதற்கு , தமிழக அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்காக, தற்போது அமலில் இருக்கும், சில அடிப்படை விதிகள் திருத்தப்பட்டுள்ளன. இதன்படி, கட்டடங்களின் உயரம், பக்கவாட்டு காலியிடம் ஆகியவற்றில், சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. பொது கட்டட விதிகள் விரைவில் செயல்பாட்டிற்கு வரும். கட்டுமான திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் நடைமுறை, ஆன்லைனுக்கு மாற்றப்பட்டு வருகிறது. காகித பயன்பாடு இன்றி, கட்டுமான திட்ட அனுமதி வழங்குவதை இக்காக்கி, இதற்கானப் பணிகள் நடந்து வருகின்றன.

வீடுகளில் விலை குறைய சலுகைக் முதலீட்டாளர்கள் மாநாட்டு கருத்தரங்கில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலர், கிருஷ்ணன் பேசியதாவது; மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றான, உறைவிட வசதியை அனைவருக்கும் உறுதி செய்வதற்காக, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்துறையில், புதிய நிறுவனங்கள், அதிக அளவில் முதலீடு செய்ய வாய்ப்புள்ளது. புதுய கட்டுமான திட்டங்களுக்கான அனுமதி பெறுவதில், ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், பல்வேறு பிரச்னைகளை சந்திப்பது தெரிய வந்தது. இதற்கு தீர்வு காண, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு புதிய முடியிருப்பு திட்டங்கள் அகமாவதுடன், அவற்றில் வீடுகளின் விலை, மக்கள் வாங்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும். இதற்காக, பொது கட்டடங்களுக்கான, எப்.எஸ்.ஐ., எனப்படும், தளபரப்பு குறியீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து பல சலுகைகள்வழங்கப்பட உள்ளன. இச்சலுகைகள் முழுமையாக அமலுக்கு வரும் போது, வீடுகள் விலை வெகுவாக குறையும்.



மருத்துவச் செய்தி

Dr. ஃபரூக் அப்துல்லா, MBBS., M.D.,
பொதுநல மருத்துவர்

# உயிர் காக்கும் சிகிச்சை... டயாலசிஸ் விரிவான விளக்கம்!

சினிமா என்பது சமீப கால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது. அந்த வகையில் சமீப கால தமிழ் சினிமாக்களில் தொற்றா நோய்களை காமெடியாகவோ அல்லது செண்ட்டிமெண்டாகவோ சேர்க்கும் தன்மையை காண முடிகிறது. சமீபத்தில் பார்த்த ரஜினிகாந்த் நடித்திருக்கும் "பேட்ட" படத்தில் கூட வில்லனான சிங்கார் சிங் கதாபாத்திரத்திற்கு சிறுநீரகம் முழுவதும் செயலிழந்து தனது வீட்டின் மாடியிலேயே வீட்டிலேயே ஹீமோ டயாலசிஸ் (Hemodialysis) செய்து கொள்ளும் நிலையில் இருப்பதாக இயக்குநர் காண்பித்திருப்பார். படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் ரஜினி அவரைப் பழிவாங்க வரும் போது தப்பித்து சென்று விடாமல் இருப்பதற்காக அவருக்கு டயாலசிஸ் செய்யுமாறு காண்பிக்கப் பட்டாலும் தற்போதைய நமது தமிழக நடப்பு நிலவரத்தை பிரதிபலிப்பதாகவே அந்த காட்சி அமைந்துள்ளது.

தமிழகத்தில் நீரிழிவு (Diabetes) மற்றும் ரத்தக்கொதிப்பு போன்ற வாழ்வியல் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அதிகமாகி வருகின்றனர். இவர்களில் கிட்னி ஃபெயிலியர் நிலையில் மாற்று கிட்னி வேண்டி காத்திருப்போர் பட்டியல் பெரிதாகிக் கொண்டே செல்கிறது. தெருவுக்கு ஒரு கிட்னி நோயாளியாவது இருக்கும் நிலை தற்போது இருக்கிறது. இது நாளை குடும்பத்தில் ஒருவர் கிட்னி நோயாளியாக மாறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது காரணம் 1980 களில் தெருவில் ஒருவருக்கு நீரிழிவு இருந்தது. அதுவே இப்போது குடும்பத்தில் ஒருவருக்கு நீரிழிவு இருக்கிறது. நாளுக்கு நாள் டயாலிசிஸ் தேவைப்படும் நோயாளிகள் அதிகமாகி வருவதும், டயாலிசிஸ் மிகவும் தேவையான சிகிச்சையாக மாறியிருப்பதும் உணர்த்துவது நாம் இனிவரும் பத்து வருடங்களில் அதிகமான கிட்னி நோயாளிகளை காண இருக்கிறோம் என்பதைத்தான்.


இந்தக் கட்டுரை வழியே கிட்னி நோயாளிகள் ஏன் தோன்றுகிறார்கள் என்று காண்போம். நீங்கள் தமிழகத்தில் எங்கு இருந்தாலும் சரியே. அருகில் இருக்கும் மருத்துவமனையில் டயாலிசிஸ் யூனிட் இருந்தால் அங்கு சென்று டயாலிசிஸ் செய்து விட்டு வெளியே வரும் மக்களிடம். ஏன் டயாலிசிஸ் செய்யும் நிலை உங்களுக்கு வந்தது? என்று கேளுங்கள் 99 சதவிகிதம் பேர் கண்டிப்பாக தங்களுக்கு நீரிழிவு அல்லது ரத்தக்கொதிப்பு இருந்ததாகவும் அதை சரியாகக் கட்டுக்குள் வைக்கவில்லை எனவும்... கூறுவதைக் கேட்கலாம்.

நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பு ஆகிய இரண்டு நோய்களும் தங்களது முதல் எதிரியாக நினைப்பது "சிறுநீரகங்களைத்தான்" எக்காரணம் கொண்டும் நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பை அதன் அளவுகளுக்குள் நீங்கள் வைக்காவிட்டால் உங்கள் கிட்னிகள் பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்புகள் மிக அதிகம். தொற்றா நோய்களான நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பு ஆகிய இரண்டையும் சரி செய்ய அறிவியல்பூர்வமான சிறந்த வழி அதற்குரிய நவீன அறிவியல் பயின்ற மருத்துவரைச்சந்தித்து மருத்துவ சிகிச்சை எடுக்க வேணடும். கூடவே உணவு முறை மாற்றம் செய்ய வேணடும். அதிக மாவுச்சத்து உணவுமுறை என்பது நீரிழிவையும் ரத்த கொதிப்பையும் அதிகப்படுத்தும். ஆகவே மாவுச்சத்தைக் குறைத்து உண்பது அறிவியல்பூர்வமாக நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பை குறைக்க உதவும்.

இது கூட தினமும் ஒரு மணி நேரம் நடை பயிற்சி அல்லது தங்களது அலுவலகப்பணிகளுக்கிடையே 10,000 நடைகள் நடந்திருக்க வேணடும். மன அழுத்தத்தை முடிந்த அளவு திறனுடன் கையாண்டு மன அழுத்தம் நமது உடலைப் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் தினமும் ஏழு மணிநேரமாவது உறக்கம் வேண்டும். நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பு குறித்த மூடநம்பிக்கைகளை நம்பாமல் அறிவார்ந்து சிந்தித்து அறிவியல் கூறிய முறைப்படி அதை கட்டுக்குள் வைக்க வேண்டும்

"நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பு போன்றவை நோய்களே அல்ல என்று பொய்களை நம்பிக்கொண்டு சிகிச்சை எடுக்காமல் இருந்தால் பின்னாளில் சிறுநீரகம் முழுமையாக செயலிழந்து விட்ட பிறகு அதை சரிசெய்ய முடியாது. மேலும் முழுவதும் செயலிழந்துவிட்ட கிட்னியை வைத்து பல்வேறு மூடநம்பிக்கைகள் மற்றும் போலி மருத்துவ சிகிச்சைகள் வளர்ந்து மக்களை சுரண்டுகின்றன. முழுவதும் செயலிழந்த கிட்னியை முற்றிலும் சரிசெய்கிறேன் என்று யாராவது கிளம்பினால் அது முற்றிலும் பொய் புரட்டு வேலை. காரணம் முழுவதும் செயலிழந்த கிட்னியில் நூறு சதவிகிதம் அதில் உள்ள நெஃப்ரான்கள் எனும் நுண்ணிய செல்கள் அழிந்திருக்கும். நெஃப்ரான்கள் முழுவதும் அழிந்துவிட்ட நிலையில் அதை சரிசெய்து செப்பனிடுவது முடியாத காரியம்.

இதற்காகவே கண்டறியப்பட்ட முக்கிய உயிர்காக்கும் சிகிச்சைதான் டயாலிசிஸ் என்பதாகும் இந்த டயாலிசிஸ் என்பது இயந்திரத்தின் உதவியுடன் சிறுநீரகம் செய்யும் வேலையை செய்வதாகும். சிறுநீரகங்கள் இரண்டும் இயற்கையாக செய்யும் வேலை என்ன? நமது ரத்தத்தில் உள்ள கழிவுப்பொருட்களை அனுதினமும் சுத்தம் செய்வது கிட்னிகளில் உள்ள நெஃப்ரான்களாகும். கிட்னிகள் சரியாக வேலை செய்கின்றன என்பதை எளிதாக நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? ஒரு வீட்டில் நாம் தூய்மை செய்ய ஒரு பணியாளரை நியமிக்கிறோம். அவர் தினமும் சரியாக வேலை செய்வதை எப்படி நாம் கண்காணிக்க முடியும்? வீட்டில் சேரும் குப்பைகளின் அளவை வைத்து அவர் செய்யும் பணியை அளவிட முடியும். வீட்டில் குப்பையே இல்லையெனில் பணியாளர் தன் பொறுப்பை சிறப்பாக செய்கிறார் என்று அர்த்தம். குப்பை அதிகமாக சேர்ந்தால் அவர் பொறுப்பை சரியாக செய்யவில்லை என்று அர்த்தம்.




இது போலத்தான் நமது ரத்தத்தில் கழிவுப்பொருட்களான யூரியா மற்றும் கிரியாடினின் ஆகிய இரண்டும் சரியாக இருந்தால்.. துப்புரவுப்பணியாளரான கிட்னி சரியாக வேலை செய்கிறது என்று அர்த்தம். இந்த இரண்டும் தன் அளவுக்கு மேல் இருந்தால் கிட்னி சரியாக வேலை செய்யவில்லை என்று அறிய முடியும். மேலும் ஆரம்பக்கட்ட கிட்னி செயலிழப்பை கிட்னி வழியாக ஆல்புமின் எனும் புரதம் கசிவதைக்கொண்டு அறிய முடியும். நுண்ணிய அளவில் இந்த புரதம் சிறுநீரில் வெளியேறுவது (Microalbuminuria) என்பது கிட்னி செயலிழப்பின் ஆரம்பக்கட்ட நிலையை குறிக்கும். இது நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பு நோயாளிகளுக்கு நிகழும் விசயமாகும். இதை உடனே அறிந்து சரியான சிகிச்சை எடுத்தால் கிட்னியை சீர் செய்ய இயலும்.

இப்போது இதற்குரிய சரியான சிகிச்சை எது? முழுவதும் செயலிழந்து விட்ட கிட்னிக்கு சரியான சிகிச்சை என்பது மாற்று கிட்னியைப் பொறுத்துவதே. இதை கிட்னி மாற்று அறுவை சிகிச்சை என்கிறோம். (Kidney Transplantation) அரசாங்கத்தால் கிட்னி மாற்று அறுவை சிகிச்சைக்கென தனி குழு அமைக்கப்பட்டு அந்த குழு கிட்னி வேண்டி காத்திருப்போர் பட்டியல் அடங்கிய ரிஜிஸ்டரை பராமரிக்கிறது. மாதம் ஒரு முறை இந்தக் குழு கூடி கிட்னி தேவைப்படுவோருக்கு அதைக் கொடுக்க சம்மதிக்கும் நபரிடம் இருந்து பெற்றுத் தருகிறது. இறந்த நபர்களிடம் இருந்து

பெறப்படும் உறுப்பு மாற்று சிகிச்சைக்கு பெயர் (cadaver transplant) அதாவது நெருங்கிய ரத்த உறவு முறைகளிடம் இருந்து வாங்கப்படும் கிட்னிகளையும் பொறுத்த முடியும். இந்த கிட்னி மாற்று அறுவை சிகிச்சைக்கு மருத்துவமனையைப் பொறுத்து 10 லட்சம் முதல் 20 லட்சம் வரை செலவாகும். மேலும் மாற்று அறுவை சிகிச்சை செய்தபின் மாதம் மாதம் உண்ண வேண்டிய எதிர்ப்பு சக்தி குறைப்பு மருந்துகளுக்கு 20,000 வரை செலவாகும். இந்த அறுவை சிகிச்சையையும் மாத்திரைகளையும் அரசாங்க மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இலசவசமாகவும் பெற முடியும். சரி கிட்னி மாற்று அறுவை சிகிச்சை செய்யும் காலம் வரை எப்படி உயிரைக்காப்பது? கிட்னி வேலை செய்ய மறுத்துவிட்ட நிலையில் அந்த வேலையை செய்ய நமக்கு இருக்கும் ஒரே உயிர்காக்கும் சிகிச்சை "டயாலிசிஸ்" எனும் உயிர்காக்கும் சிகிச்சை ஆகும். வாரம் இரண்டு முறை செய்யப்படும் இந்த சிகிச்சை மூலம் ரத்தத்தில் சேர்ந்த கழிவுகளை செயற்கையாக நாம் சுத்திதீகரிக்கிறோம். ஆபத்தான பல கழிவுகள் உடலில் சேர்ந்தால் மரணம் நேரும்.

இதிலிருந்து டயாலிசிஸ் நம்மைக்காக்கிறது. டயாலிசிஸ் குறித்து பரப்பப்படும் தேவையற்ற அச்சத்தால், முழுவதும் பழுதடைந்த கிட்னிகளை கொண்ட நபர்களும் டயாலிசிஸ் செய்து கொள்ளாமல் போலி மருத்துவர்களை நாடி அதனால் இறக்கின்றனர். ஒரு டயாலிசிஸ்க்கு தற்போது 1200 முதல் 2000 வரை செலவாகிறது .தமிழக முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் டயாலிசிஸ் பல தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக செய்யப்படுகிறது. அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் டயாலிசிஸ் இலவசமாக செய்யப்படுகிறது. இதை அனைத்து மக்களும் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வீட்டிலேயே வயிற்றின் மூலம் செய்து கொள்ளும் peritoneal dialysis என்ற சிகிச்சையும் உண்டு. ஆனால் பின்னதை விட hemodialysis சிறந்தது. இககட்டுரை வழி நான் கூறவருவது. நீரிழிவு மற்றும் ரத்தக்கொதிப்பு நோயாளிகள் தங்களது சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். தங்களது சிறுநீரகம் நன்றாக செயல்படுகிறதா ? என்று அவ்வப்போது கவனிக்க வேண்டும். சிறுநீரகம் செயலிழந்தவர்கள் கண்டிப்பாக சிறுநீரக சிறப்பு நிபுணரை அணுகி அதற்கான சிகிச்சை அளிக்க வேண்டும். டயாலிசிஸ் என்பது உயிர்காக்கும் சிகிச்சையாகும். அதைப்பற்றிய வதந்திகள் தேவையற்றது. யாருக்கேனும் கிட்னி முழுவதுமாக பழுதடைந்தால் கட்டாயம் டயாலிசிஸ் அவரது உயிரைக்காக்கும்.

– குணசேகர்



Dance Performance of Smt.Sharatha Vinoth, (Disciple of Kalaimamani Aacharya Choolamani Smt Srekala Bharath) at Rasika Ranjani Sabha on January 12th 2019



சிறுகதை

# நினைவுகள் தந்த பரிசு

சீதாவின் அப்பா சீனிவாசன், அம்மா வசந்தி. சீதாவுக்கு அவளுடைய அப்பா என்றால் அவ்வளவு பிரியம். அவளுடைய அப்பாவிறகும் சீதா என்றால் உயிர். சீதா 8 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் பொழுதே அவர் உடல் நிலை சாரியில்லாமல் இறந்து விட்டார்.

அவளுடைய அப்பா இறந்து விட்டார் என்பதை அவளால் நினைத்துக் கூட பார்க்கவே முடியவில்லை. அதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவே இல்லை. ஒவ்வொரு நாளும் அவளுடைய அப்பாவின் நினைவுகளிலேயே வாழ்ந்தாள். அவளுடைய அப்பாவுடன் வெளியே சென்று வந்த ஞாபகம் தான் அதிகமாய் இருந்தது. யாராவது பைக்கில் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போவதைப் பார்த்தால், உடனே சீதா, ஒரு நிமிடம் நின்று, நம்மளும் இப்படித்தானே நம்ம அப்பா கூட போவோம் என்று ஏக்கப்படுவாள்.


சீதாவின் கையெழுத்து மிகவும் அழகாக இருக்கும். அவளுடைய அம்மா, உன்னுடைய அப்பாவும் இப்படித் தான் எழுதுவார் என்றாள். உடனே சீதா, அப்பா தான் என்கூட இல்லை, அப்பாவோட கையெழுத்தாவது என்னுடன் இருக்கிறதே என்று நினைத்துக் கொள்வாள்.

சீதா படிக்கும் பள்ளியில் மாநில அளவில் கட்டுரைப் போட்டி நடப்பதாக அறிவித்தார்கள். சீதாவிற்கு அனைத்துப் போட்டிகளிலும் கலந்து கொள்ளும் ஆர்வம் அதிகம். ஆனால் அவளின் அப்பா இறந்ததில் இருந்து அவளுக்கு ஆர்வம் குறைந்தது. இதைக் கவனித்த வகுப்பாசிரியர் அவளுடைய அம்மாவிடம் வந்து கூறினார். அம்மா உங்கள் மகள் சீதாவுக்கு திறமைகள் அதிகம். ஆனால் ஏதோ ஒரு கவலையினால் எதையோ இழந்து போல் உட்கார்ந்திருக்கா. நல்லா படிக்கிற பிள்ளையா இருக்கிறதனால மனசு கேட்காம வந்து சொல்றேன் அம்மா, என்ன ஏதுன்னு கொஞ்சம் கவனிச்சுக்கோங்கம்மான்னு சொல்லிட்டு கிளம்பிட்டாரு.

சீதா இப்படி இருப்பதை நினைத்து அவளுடைய அம்மா மிகவும் வருத்தப்பட்டாள். சீதா, ஒரு நிமிஷம் நில்லு, ஏன் மாநில அளவில் நடக்கும் கட்டுரைப் போட்டியில நீ கலந்துக்கல? என்று கேட்டாள் அவளுடைய அம்மா.

‘இல்லம்மா, எதுலயும் கலந்துக்கணும்னு தோணல’ என்றாள் சீதா.

ஏன் சீதா? என்றாள் அவளுடைய அம்மா. சீதாவோ, அம்மா எனக்கு அப்பா ஞாபகம் வந்துடுச்சு. போன தடவை கட்டுரைப் போட்டினு அறிவிச்சப்ப , பள்ளி முடிந்தவுடன் வீட்டுக்கு வந்தவுடனே, அப்பாகிட்ட கட்டுரைப் போட்டி வச்சிருக்காங்கன்னு சொன்னவுடனே, உடனே



அழைச்சிட்டுப் போய் கட்டுரை புக் வாங்கிக் கொடுத்தாங்க , பரிசும் கிடைச்சுது. இப்ப எனக்கு அந்த ஞாபகம்தான் அம்மா வருது. அப்பா இல்லையே அம்மா, நான் எதற்கு போட்டியில கலந்துக்கணும். அதனால தான் அம்மா, நான் கலந்துக்கல என்றாள் சீதா.

'இங்கப்பாரும்மா சீதா நீ எந்த போட்டியிலும் கலந்துக்கலன்னா , உங்க அப்பாவை நீ வேதனைப்படுத்தறேன்னு தான் அர்த்தம். உன்னுடைய அப்பா இருந்தாலும், இறந்தாலும் அவருக்குத் தான் பெருமை. எனக்கு தெரிஞ்சதை சொல்லிட்டேன் அப்புறம் உன் இஷ்டம்' என்று சொல்லிக்கொண்டே சென்று விட்டாள் அவளுடைய அம்மா.

'என்னை மன்னிச்சுடுங்கம்மா, நான் எல்லாப் போட்டியிலும் கலந்து கொள்கிறேன் என்றாள் சீதா.' கட்டுரைப் போட்டிக்கு என்ன தலைப்புக் கொடுத்திருக்காங்க, என்றாள் அவளுடைய அம்மா." ராமனின் சீதா நினைவுகள், என்ற தலைப்புக் கொடுத்திருக்காங்கம்மா. என்ன எழுதுறதுன்னு தெரியலம்மா என்றாள் சீதா.

'கவலைப்படாதம்மா சீதா, உன்னுடைய அப்பாவை நினைச்சுகிட்டு போய் படு. காலையில் உனக்கு என்ன தோணுதோ அதை எழுது' என்றாள் அவளுடைய அம்மா.

'சரிம்மா' என்று போய் படுத்தாள் சீதா. இரவு தூங்கும்பொழுது அவளுடைய அப்பாவின் நினைவுகள் தான் வழக்கம் போல் வந்தன. அவளுடைய அப்பா அவளிடம் பேசுவது போல் இருந்தது. அடுத்த நாள் மாநில அளவில் நடக்கும் கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டாள். என்ன எழுதுவது என்று தெரியாமல் முழித்த அவளுக்கு உன் அப்பாவை நினைத்துக் கொண்டு அப்பாவைப் பற்றிய நினைவுகளிலேயே எழுதத் தொடங்கினாள்.

நினைவுகள் என்றும் அழிவதில்லை என்பதற்கு ஏற்றாற்போல் சீதாவிற்கு மாநில அளவில் முதல் பரிசும் கிடைத்தது. பரிசை வாங்கிக் கொண்டு அவளுடைய அம்மாவிடம் வந்து 'அம்மா, நீங்க ஊக்கப்படுத்தியதால்தான் என்னால இந்த பரிசை வாங்க முடிஞ்சுது என்றாள். வாங்கிய பரிசை அப்பாவின் படத்திற்கு முன் வைத்துவிட்டு வாம்மா என்றாள் அவளுடைய அம்மா. அப்பாவின் படத்திற்கு முன் பரிசை வைத்துவிட்டு 'அப்பா இது உங்கள் நினைவுகளுக்கு கிடைத்த பரிசு' என்று அவளுடைய அப்பாவின் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அப்பாவும் அவளைப் பார்த்து சிரிப்பது போலவே இருந்தது.

# பலவீனமே பலம்

சிறுவன் ஒருவன் ஜூடோ பயில விரும்பினான். அவனுக்கோ ஒரு விபத்தினால் இடது கை போய்விட்டது எனினும் இந்தக் குறையைப் பொருட்படுத்தாமல், குரு ஒருவர் அவனுக்குப் பயிற்சி அளிக்க ஒப்புக் கொண்டார்.

தினமும் பயிற்சி அளித்தார் குரு. ஆனால் ஒரே ஒரு குத்து வித்தையைத் தான் சொல்லிக் கொடுத்தார். நான்கைந்து மாதங்கள் சென்றன. அப்போதும் அதே பயிற்சிதான். சிறுவனுக்கோ ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டான்.

ஒரு நாள் சிறுவன் குருவைக் கேட்டே விட்டான், 'இந்த ஒரு குத்து போதும் உனக்கு' என்று சொல்லிவிட்டார். நாட்கள் கடந்தன. குரு சிறுவனைப் போட்டிக்கு அனுப்பினார். ஒரு கையுடன் வந்த சிறுவனைப் பார்த்து பலரும் அற்பமாக எண்ணினர். ஆனால்... குரு நினைத்தபடி அந்த சிறுவன் வெற்றி விட்டான். எல்லோருக்கும் ஆச்சர்யம். சிறுவனுக்கும் கூட ஆச்சரியமே!

" எப்படி குருவே என்னால் ஒருகையை வைத்துக் கொண்டு ஒரே ஒரு குத்துப் பயிற்சியை மட்டும் கற்று வெற்றி பெற முடிந்தது?" என்று கேட்டான்.

குரு சொன்னார், " இரண்டே காரணங்கள் தான், ஒன்று நீ பயிற்சி செய்தது ஜூடோவிலேயே மிகவும் கடினமான குத்து. இரண்டு இந்தக் குத்தை தடுக்க வேண்டும் என்றால் குத்துபவனின் இடது கையை மடக்க வேண்டும், உன்னிடம் அது இல்லை."

குருவுக்கு ஆத்மார்த்தமாக நன்றி சொன்னான் சிறுவன்.



**S.SURIYA STD IX**

*SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL , CHENNAI*

# Robotic Knee Replacement Surgery Performed

## at SIMS Hospital

## First and Only Robotic Knee Replacement Institute in Tamil Nadu



Doctors at SIMS Hospital this week performed two back-to-back successful Robotic total knee replacement surgeries, for the first time in Tamil Nadu on 65 years old patients, both with severe knee pain since over 5 years. These surgeries were done using the NAVIO PFS Robotic surgical system, the latest advanced generation Robotic intervention in joint replacement (developed in the USA) and to the delight of the families, enabled these patients to walk without significant pain within 4 hours of the surgery itself. The surgery was performed successfully by the team lead by Dr. Vijay C. Bose, Joint Director & Senior Consultant, Institute of Orthopedics SIMS Hospital, Dr. Pichai Suryanarayanan, Sr.V.P, Medical, Joint Director & Senior Consultant, and Institute of Orthopedics SIMS Hospital. Dr. Ashok Kumar P.S., Senior Consultant, Department of Advanced Joint Replacement Surgery at SIMS Hospital. Padma Shri. Kapil Dev, Captain of World Cup Winning Team, presided over the occasion of formal launch as Chief Guest. Veteran Film Actor. Mrs. Jyotika Suriya, graced the occasion as Guest of Honour.

"Robotic joint replacement surgery has many definitive benefits over traditional joint replacement surgery: one being, a bone conserving technology as it helps in preserving natural anatomy. It enables the surgeon to operate with enhanced precision even during the most complex procedures and difficult cases. Enhanced precision and lesser bone removal lead to less blood loss, painless, faster and better post-operative outcomes for the patient. "Robotic assisted joint replacement is at a much higher level with regards to many parameters than traditional joint replacement surgery", says Dr. Vijay C. Bose, Joint Director & Senior Consultant, and Institute of Orthopedics SIMS Hospital.

"The NAVIO Robotic system reduces the possibilities of human error and ensures perfect alignment, leading to the longevity of the joint implant. Though this is a very high-end technology in our hospital, we have chosen to not make it expensive - so that more patients will be able to benefit from this", confirms Dr. Ashok Kumar P.S., Senior Consultant, Department of Advanced Joint Replacement Surgery at SIMS Hospital.

The two patients and their families are extremely happy with the outcomes from such world-class cutting-edge technology, available to them in Tamil Nadu itself. They were both discharged to get back home within 2-3 days of the joint replacement surgery and are now undergoing physical rehabilitation to return to an active lifestyle soon.

Dr. Bose adds, "SIMS Hospital has always been at the helm of technology it is a centre of excellence in Orthopedics for patients from all across the world. Patient safety and outcomes have always been our top priority

and we believe technology helps us in achieving that goal, besides a very warm and friendly team that works with care and commitment round the clock towards all our patients, like they are our family. With Robotic joint replacement, we are driving this differentiated edge ahead and ensuring that we are at par with the world after the US and we are the only second country in the world to adopt it successfully after US!"

**About SIMS Hospital:**

SIMS Hospital Chennai render 360 degree advanced quaternary healthcare services with multi-speciality, state-of-the-art multi organ transplant service. With the finest combination of experience, expertise and well-coordinated patient centric team work, every step is aimed at ensuring excellence in patient care. SIMS Hospital strives to establish trust and excellece, following the footsteps of the SRM Group - a large conglomerate with an overwhelming presence in multi-discipline education, medicine, transport industry, hospitality and infotainment. SIMS Hospital offers advanced wide spectrum of specilty medical care services as well as enabling cross specialty consultation for unmathced patient experience.



– மோகன் ராஜ்


# குழந்தையின் பிரச்சினை தீர கமலமுனி சித்தர் மருத்துவம்

1. மதன காம வீரிய விருத்தி மாத்திரை –20 Tab Rs. 400 (ஆண்மை எழுச்சி பெற்று வீரியம் அதிகமாகும்)
2. தம்பன சூரணம் – 10 நாள் மருந்து Rs. 400 (நீண்ட நேர உறவு நீடிக்க)
3. விந்து மாத்திரை – 20 Tab Rs. 200 (விந்தை கெட்டியாக்கி உயிரணுக்கள் அதிகமாக்கும்)
4. கமலமுனி சிரஞ்சீவி காயகற்ப சூரணம்–1 மாத மருந்து Rs.1000 உடல் கழிவுகளை வெளியேற்ற உடல், மன வலிமை தந்து இளமை நீட்டிக்க உதவும்.
5. மதன காம வீரிய விருத்தி லேகியம் – ஆண்மை எழுச்சி பெற்று வீரியம் அதிகமாகும். ஒரு மாத மருந்து ரூ.750/–
6. விந்து விருத்தி லேகியம் – விந்தை கெட்டியாக்கி, உயிரணுக்கள் அதிகமாக்கி, விந்து ஊறச் செய்யும் குழந்தையின்மை பிரச்சினை தீரும் 1 மாத மருந்து 1000/–
7. மதன காம வீரிய விருத்திதைலம்: ஆண்மை சக்தியை அதிகமாக்கி, வளர்ச்சியை அதிகமாக்கும் 30ml ரூ.200/–
8. ஜீவ சத்து சூரணம் : இதை பாலில் கலந்து குடித்து வர ஒரே மாதத்தில் உடல் சக்தி பெறும். உடல் அசதி, சோர்வு, களைப்பு நீங்கி உடல் பலம் பெறும் Rs. 750.
9. மகா வர்ம தைலம்: மூட்டு தேய்மானம், வீக்கம், வலி, ஜவ்வு விலகுதல், கை கால் முடக்கம் நீங்கி எலும்புகள் பலம் பெறும், 100ml 200/–

## டிசம்பர் மாத புதிய அறிமுகம்:

1. முடி கருமை தைலம் –இதை தொடர்ந்து தடவி வர நரைப்பதை தடுக்கும். செம்பட்டை முடி, நரைத்த முடி வருவதைத் தடுக்கும். முடி வளரும் 100ml – 200/–
2. நவ மூல நிவாரண லேகியம்: 9 வகையான மூலங்கள், ஆசனவாய் வெடிப்புகள், புண்கள், ரத்தம் ஒழுகுதல், வலி, எரிச்சல், மலச்சிக்கல் தீரும் (1 மாத மருந்து, மாத்திரை, கிரீம் – Rs. 1500)
3. அஷ்ட வாயு லேகியம் : எல்லா வகையான வாயு, வயிற்றுக் கோளாறுகள், மலச்சிக்கல் தீரும் (1 மாத மருந்து –750) மகா வர்ம மூட்டுவாத லேகியம் : மூட்டு தேய்மானம், வீக்கம் வலி, ஜவ்வு தேய்மானம், கை, கால், மூட்டு, வலி தீரும் (1 மாத மருந்து –750) 100% மூலிகைகளாலானது பக்கவிளைவுகள் கிடையாது.

CELL : 9786868516, 6380144943

## ஆசிரியர் போராட்டம்: மாணவர்கள் எதிர்காலம் ?

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்துசெய்து விட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ கடந்த 22ம் தேதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டுவருவது நாம் அறிந்ததே.

ஆசிரியர்களின் இந்த தொடர் போராட்டத்தால் வகுப்புகள் நடக்காததால், பெரும்பாலான பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. சில பள்ளிகளில் ஆசிரியர்களே மாணவர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர். 10, 11, 12ம் வகுப்புகளுக்கான அரசு பொதுத்தேர்வுக்கான காலம் நெருங்கும் நிலையில் அவர்களது படிப்பு பாதிக்கப்படுவதை அறிந்து, பட்டப்படிப்பு படித்த முன்னாள் மாணவர்கள் சிலர் தாங்கள் படித்த பள்ளிகளுக்குச் சென்று பாடம் நடத்துகின்றனர். இதற்கிடையே ஆசிரியர்களின் போராட்டத்தால், தங்களது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகப் பெற்றோர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் சமூக ஆர்வலர் அஜீஸ் மஸ்தான் என்பவர், அரசுப் பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கும் தனது மகள் மற்றும் ஒன்றாம் வகுப்பு படிக்கும் மகனுடன் ஆசிரியர்கள் போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார். இதுகுறித்து அஜீஸ் பேசும்போது,`` ஐந்து ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார். எம்.எல்.ஏ, எம்.பி என எல்லோரிடமும் பேசினேன். யாரும் கண்டுகொள்ளவில்லை. மாதா, பிதா, குரு தெய்வம் என்கின்றனர். குரு எங்கே போனார்? 50,000, 75,000 ரூபாய் சம்பளம் வாங்கிவிட்டு, அது அவர்களுக்கு போதவில்லையா?" என்றார்.

இந்நிலையில், மாணவர்களின் எதிர்காலம் கருதி தற்காலிக ஆசிரியர்களை நியமிக்கும் முடிவில் அரசு இறங்கியுள்ளது. அதன்படி, தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கான 6 நெறிமுறைகளை பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

என்னதான் புதிய ஆசிரியர்களை நியமித்தாலும் அவர்கள் எந்த அளவுக்கு பாடம் நடத்துவார்கள்? புதிய ஆசிரியர்களின் அணுகுமுறை மாணவர்களை குழப்பத்துக்கு உள்ளாக்க நேரலாம். ஒட்டுமொத்தத்தில், ஆசிரியர்களின் போராட்டம் மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.



எம் பதில்கள்

## பாரத ரத்னா விருது: திட்டமிட்டு தமிழகம் புறக்கணிக்கப்பட்டதா?

குடியரசு தினவிழாவையொட்டி இந்தியாவின் உயரிய விருதான பாரத் ரத்னா விருது அறிவிக்கப்பட்டது. அத்துடன் பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்மஸ்ரீ விருதுகள் என 112 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன. இதையடுத்து ஆளாளுக்கு ஒரு விருது கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மறைந்த முன்னாள் தமிழக முதல்வர்கள் அண்ணாதுரை மற்றும் ஜெயலலிதாவுக்கு பாரத ரத்னா வழங்க வேண்டும் என்று அ.தி.மு.கவும், கர்நாடகா மாநிலத்தைச்சேர்ந்த மறைந்த சிவக்குமார சுவாமிகளுக்கு பாரத ரத்னா வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியும், மகாராஷ்டிராவைச் சேர்ந்த வீர் சவர்கருக்கு விருது வழங்க வேண்டும் என்று சிவசேனாவும் கேட்கிறது.

இதற்கிடையே, அம்பேத்கரைத் தவிர தலித் சமூகத்தைச் சேர்ந்த வேறு எவருக்கும் இதுவரை பாரத ரத்னா விருது வழங்கப்படவில்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் குற்றம்சாட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய அரசால் வழங்கப்படும் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது மூன்று பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த நானாஜி தேஷ்முக் என்பவரது பெயரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. நானாஜி தேஷ்முக் தீவிரமான ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவர். ஜனசங்கம் என்ற அரசியல் கட்சியை ஆர்.எஸ்.எஸ். துவக்கிய போது அதை மக்களிடம் பரப்புவதில் முக்கிய பங்காற்றியவர். 2002ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக மிகப்பெரிய கலவரம் நடத்தப்பட்டபோது நானாஜி தேஷ்முக் மாநிலங்களவை

உறுப்பினராக இருந்தார். அப்போது அவர் அதைக் கண்டிக்கவில்லை. வாஜ்பாயுடன் முரண்பட்டிருந்த அவர் அன்றைய குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடியை மறைமுகமாக ஆதரித்தார்.

அதுபோல, 1984ம் ஆண்டு புதுடெல்லியில் சீக்கியர்களுக்கு எதிராக கலவரம் நடத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டபோது அதை அவர் ஆதரித்ததாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. அத்தகைய ஒருவருக்கு பாரத ரத்னா விருது வழங்குவது அந்த விருது உருவாக்கப்பட்ட நோக்கத்துக்கே எதிரானதாகும். இந்திய நாட்டின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது இதுவரை 48 பேருக்கு வழங்கப் பட்டுள்ளது. அந்தப் பட்டியலைப் பார்த்தால் முன்னேறிய சாதியினரே 60 சதவிகிதம் அந்த விருதைப் பெற்றுள்ளனர். பாரத ரத்னா விருதை மொழி, இனம், மதம், சாதி, பாலினப் பாகுபாடு இல்லாமல் வழங்க வேண்டும் என்று அது உருவாக்கப்பட்டபோது கூறப்பட்டுள்ளது.

ஆனால் அந்த நோக்கத்துக்கு மாறாக அந்த விருதுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை அம்பேத்கரைத் தவிர தலித் சமூகத்தைச் சேர்ந்த வேறு எவருக்கும் பாரத ரத்னா விருது வழங்கப்படவில்லை. பலமுறை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்ட விஞ்ஞானி மேக்நாத் சாஹா, அரசியல் தலைவர் கன்ஷிராம், முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் போன்ற தகுதிவாய்ந்த பலர் தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதாலேயே புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

தந்தை பெரியார், மறைந்த திமுக தலைவர் கருணாநிதி, மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஆகியோருக்கு பாரத ரத்னா வழங்கவேண்டும் என தமிழகத்தின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது. அவையும் ஏற்கப்படவில்லை. பாரத ரத்னா விருது மட்டுமன்றி பத்ம பூஷண், பத்ம விபூஷண் ஆகிய விருதுகளிலும்கூட தமிழகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார். ஆக இந்தமுறை பாரத ரத்னா விருது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

எம் பதில்கள்

## அனைவருக்கும் குறைந்தபட்ச சம்பளம்: வாக்குறுதி நிறைவேறுமா?

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவில் உள்ள அனைத்து ஏழைகளுக்கும் சமமாக குறைந்தபட்ச வருமானம் வழங்கப்படும் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளது அரசியல் முக்கியம் வாய்ந்ததாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மக்களுக்குமான நல்லதொரு திட்டமாகவும் பார்க்கப்படுகிறது.

பாராளுமன்ற தேர்தல் களைகட்டத் தொடங்கி இருக்கும் நிலையில், பிரியங்கா காந்தியின் வருகைக்கு பின் காங்கிரஸ் புத்துயிர் பெற்றுள்ளது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சி குறைந்தபட்ச பொதுவான வருமானம் குறித்த அறிவிப்பை அதிரடியாக வெளியிட்டுள்ளது.




இதுவரை எந்த அரசும் செய்யாத அறிவிப்பை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது பலரது புருவத்தையும் உயர்த்த வைத்துள்ளது.

பொதுவான குறைந்தபட்ச வருமானம் என்பதை ஆங்கிலத்தில் Universal Basic Income ( UBI) என்று அழைப்பார்கள். அதன்படி நாம் என்ன வேலை பார்த்தாலும், எந்த பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்தியாவில் இருக்கும் எல்லோருக்கும் குறைந்தபட்ச சம்பளம் ஒன்று வழங்கப்படும். அதாவது இந்தியாவில் சம்பளம் வாங்காத நபர் ஒருவர் இருக்கவே மாட்டார். இது உலகில் சில நாடுகளில் மட்டும் நடைமுறையில் உள்ளது.

இதைத்தான் காங்கிரஸ் கொண்டு வர உள்ளதாக தற்போது தெரிவித்துள்ளது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவில் உள்ள அனைத்து ஏழைகளுக்கும் சமமாக குறைந்தபட்ச வருமானம் வழங்கப்படும் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். குறைந்தபட்ச வருமானம் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்படும். நாட்டில் ஏழைகளே இருக்கக் கூடாது, என்றும் கூறியுள்ளார்

இதுபற்றி ராகுல்காந்தி டிவிட்டரில் பதிவிட்டிருக்கிறார். அதாவது, இதுவரை எந்த அரசும் செய்யாத விஷயத்தை நாங்கள் செய்யப்போகிறோம். இந்தியாவில் உள்ள அனைத்து ஏழைகளுக்கும் சமமாக குறைந்தபட்ச வருமானம் வழங்க திட்டம் கொண்டு வரப்போகிறோம். பசி மற்றும் வறுமையை ஒழிக்க இந்தத் திட்டம் பெரிய உதவியாக இருக்கும். 2019 தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றால் இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் என்று கூறியுள்ளார். இது நடைமுறைக்கு சாத்தியமா? என்பதை காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஏன் சொல்கிறோம் என்றால், முதலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சிக் கட்டிலில் அமர வேண்டும். அதன்பிறகு அந்த வாக்குறுதியை கடந்த கால அரசியல் வாக்குறுதிகளைப்போல அல்லாமல் முழுமையாக நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் முழுமுனைப்புடன் செயல்பட்டால்தான் அது சாத்தியம்.



நடிகர் சூர்யா தான் நடித்த 'என்.ஜி.கே' படப்பிடிப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அந்தப் படக்குழுவில் பணிபுரிந்த இணை இயக்குநர்கள் முதல் டீ பாய்வரை அனைவருக்கும் தங்க காசுகளை பரிசளித்துள்ளார்.

2019ஆம் ஆண்டில் மிகவும் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்று 'என்.ஜி.கே'. செல்வராகவன் இயக்கத்தில் சூர்யா, ரகுல் பரீத், சிங், சாய்பல்லவி உள்ளிட்ட பலர் இதில் நடித்துள்ளனர்.

ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படம் மெகா பட்ஜெட் உருவாகிறது. யுவன் இசையமைத்துள்ளார். செல்வராகவனுக்கு உடல்நிலக்குறைவு ஏற்பட்டதால் இடையில் படப்பிடிப்பு தடைப்பட்டது. செல்வராகவன் உடல் உடல்நிலை தேரியதும் படப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்றது.

சென்னை, ஹைதராபாத் என பல இடங்களில் நடைபெற்ற படப்பிடிப்பு ஜனவரி 12ஆம் தேதி முடிவு கண்டது. இதனைத் தொடர்ந்து இயக்குநர்கள் குழு, ஒளிப்பதிவாளர்கள் குழு, கலை இயக்குநர்கள் குழு என அனைவருக்கும் 8 கிராம் (ஒரு சவரன்) தங்கக் காசுகளை சூர்யா பரிசளித்துள்ளார். சுமார் 130 பேர் 1040 கிராம் (1.04 கிலோ) தங்க நாணயங்ஙளை சூர்யாவின் பரிசாகப் பெற்றுள்ளனர்.

படப்படிப்பின் கடைசி நாளில் சூர்யா அளித்த இந்த எதிர்பாராத பரிசு படக்குழுவினர் அனைவரையும் மகிழ்ச்சியில் நிறைவடைய வைத்துள்ளது. சமூக வலைத்தளங்களில் சூர்யா ரசிகர்களின் பாராட்டுகளும் குவிந்த வண்ணம் உள்ளன.

இப்படம் கோடை விடுமுறைக்கு வெளியாக வாய்ப்பு உள்ளது எனக் கூறப்படுகிறது.

பாலிவுட் நடிகர் சயிப் அலி கானின் மகள் சாரா நடித்த கேதர்நாத் மற்றும் சிம்பா ஆகிய படங்கள் ஹிட்டாகியுள்ளன. இதையடுத்து பாலிவுட்காரர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார் அவர்.

வீர் பஹாரியாவை மட்டுமே காதலித்தேன். அதன் பிறகு நான் யாரையும் காதலிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் சாரா. 2016ம் ஆண்டில் சாரா, வீர் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் வெளியாகின. அவர்கள் மோதிரம் மாற்றிக் கொண்டதாக கூட கூறப்பட்டது.

# படபிடிப்பை அசரவைத்த 'தங்க' மகன் சூர்யா





# அஜீத் ஜோடியாக வித்யாபாலன்

விஸ்வாசம் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அஜீத் குமார் நடிக்கும் அடுத்த படத்தைப் பே வியூ ப்ரொஜெக்ட்ஸ் எல் எல் பி என்கிற நிறுவனத்தின் சார்பில் போனி கபூர் தயாரிக்க, வினோத் குமார் இயக்க உள்ளார் என்பது அறிந்ததே. 2019 ஆம் ஆண்டின் கோடை விடுமுறையில் வெளியிட வேண்டும் என்கிற உத்வேகத்துடன் படப்பிடிப்பு குழுவினர் படத்தை துவக்க உள்ளனர்.

இந்த படத்தில் அஜீத்துக்கு ஜோடியாக வித்யா பாலன் நடிக்கிறார். படத்தில் வேறு யாரெல்லாம் நடிக்கிறார்கள் எனும் பட்டியலை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, ரங்கராஜ் பாண்டே, ஷ்ரத்தா ஸ்ரீநாத், அபிராமி வெக்கடாச்சலம், ஆண்ட்ரிய தாரியங், அர்ஜுன் சிதம்பரம், ஆதிக் ரவிச்சந்திரன், அஸ்வின் ராவ், சுஜித் ஷங்கர் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.



# மனம் திறந்த ஓவியா!

பிக் பாஸ்க் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி. என்னை தேடி வரும் பட வாய்ப்புகளை எல்லாம் நான் ஒப்புக் கொள்வது இல்லை எனக்கு பிடித்தால் மட்டுமே ஒப்புக்கொள்கிறேன். என் சினிமா பயணத்தை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பவில்லை. நான் எடுக்கும் முடிவுகள் எனக்கு திருப்தி அளிக்கின்றன.

எனக்கும் ஆரவுக்கும் இடையே நல்ல உறவு உள்ளது எனக்கு அவர் மீது அக்கறை உள்ளது. அவருக்கும் என் மீது அப்படித் தான். அவர் அவரது கெரியரில் கவனம் செலுத்துதிவருகிறார். இந்த உறவுக்கு பெயர் நட்பு என்று நான் கூற மாட்டேன். ஏதாவது இருந்தால் நான் கண்டிப்பாக அனைவருக்கும் தெரிவிப்பேன்.

"களவாணி 2, காஞ்சனா 3, 90 எம்.எல் ஆகிய மூன்று படங்களுமே வித்தியாசமானவை. காஞ் சனா 3 படத்தில் நான் காமெடி செய்துள்ளேன். காமெடி பண்ணுவது எளிது அல்ல. 90 எம்.எல் படத்தில் ஒரு ஹீரோ செய்யும் அனைத்தையும் செய்துள்ளேன்" என்று ஓவியா தெரிவித்துள்ளார்.



# உள்ளும் புறமும் - உப்பும் தேனும் சித்தர்களின் பார்வையில்

இறந்தவற்றைப் பாதுகாக்கப் பயன்படுவது உப்பு... உப்பு மனிதன் குருதியில் கலந்தவுடன் மிருக குணம் வந்து விடும், இது இறை நிலைக்கு எதிர்மறையான பலனை உடையது. இறைவனுக்கு படைக்கும் எந்த உணவிலும் உப்பு சேர்க்க மாட்டார்கள்.

ஆனால் இனிப்பு இல்லாமல் செய்யவும் மாட்டார்கள் ..

ஒரு உடல் இறந்த பின்பும் பதப்படுத்த வேண்டும் என்றால் உப்பை கலந்து வைத்தால் அவை அப்படியே இருக்கும் .

உப்பு மனிதர்களுக்கு நிறைய நோய்களைக் கொடுக்கும்.

சித்த வைத்திய முறையில் உப்பை சேர்க்காமல் உணவு உண்ண பத்தியம் உண்டு ,கைதேர்ந்த வைத்தியர்கள் இதை அறிவார்கள் ...

**தேன் இனிப்புச் சுவை உடையது. சித்தர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா ?**

தேன் தன்னுடன் சேரும் பொருளை கெடுக்காது தானும் கெடாது. தேன் நாக்கில் மட்டும் இனிப்பை தரும். ஆனால் தொண்டை வழியே உள்ளே சென்றவுடன் இது கசப்பாக மாறிவிடும் தன்மை உடையது .

இதனால் தான் தேனைக் கொண்டு மருந்தை கலந்து தந்தார்கள் .

மேலும் தேன் உயிர் சக்திகளை தரும் பொருளை அப்படியே வைத்தி இருக்கும்.

ஒரு நெல்லிக் கனியை தேனில் ஊறப்போட்டு அதை 50 வருட காலம் கழித்து எடுத்து சாப்பிட்டால் அதன் உயிர் சக்தி அப்படியே இருக்கும்.

சித்த மருத்துவத்தில் தேனில் கலந்த லேகியம் தருவார்கள்...

**மனிதன் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ:**

1. மாதம் 2 முறையாவது 3 வேளையும் உப்பு இல்லாமல் உண்ண பழகி கொள்ளவேண்டும்
2. அடிக்கடி தேன் சேர்த்து உண்ணவேண்டும். தேன் சர்க்கரை நோய்களை தூண்டாது.
3. 3.தேனுடன் பால் கலந்து சாப்பிட சுண்ணாம்பு சக்தி நிறைய கிடைக்கும் நோய்கள் உப்பின் தேக்கத்தால் வருகிறது .

உப்பு அதிகமாக உள்ள மிருக உடல்கள் (அசைவ உணவுகள் )

இவைகளை நாம் தின்று (உப்பினால் ) வரும் நோய்களை குணப்படுத்த உப்பை வைத்து தயாரித்த மருந்துகள் தருகிறது இன்றைய மருத்துவம் (alaopathy)

**இனிப்பை வைத்து வைத்யம் செய்வது**

உப்பும் ,தேனும் தன்னுடன் எது சேர்த்தாலும் கெடுக்காது.

நல்ல தேனை எறும்பு தீண்டாது, உப்பையும் எறும்பு தீண்டாது

கருவாடு ,உறுகாய்,போன்றவைகள் உதாரணம்

நம் சமயத்தில் தேவ அசுர சண்டை என்பது தேனுக்கும் உப்பிற்கும் நடக்கும் சண்டையே .

தேவ அமிர்தம் என்பது தேன் ...

தேன் தேவகுணம் உடையது

உப்பு அசுரகுணம் உடையது

தேன் தேவர்கள் போல் நம்மை இறைவனிடத்தில் அழைத்துச் செல்லும் உப்பு பூலோகத்தில் இருக்க வைக்கும். இவைகள் உடல் சார்ந்த விவரம் ....

ஆகவே உப்பை குறைத்தும், தேனைச் சேர்த்தும் சாப்பிட்டுப் பழகி கொள்வோம்.

– சசி



‘ராஜ் பேலஸ்’ ராஜ் அவர்களின் இல்ல நிச்சயதார்த்த விழாவில் ‘மித்ரா டைம்ஸ்’ ஆசிரியர் எம்.எஸ். மூர்த்தி, சக்ரவர்த்தி பா.ஜ.க தலைவர், தொழிலதிபர் ஏ.வி.கே. உமாபதி, தொழிலதிபர் முனிரத்தினம், தொழிலதிபர் இரவி மற்றும் பிரபலங்கள் கலந்துக்கொண்டு மணமக்களை வாழ்தினார்கள்



# கடமை உணர்வு கொண்ட காவலர் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட ஆசிரியரும் கூட!

## மத்திய கிரைம் - பிராஞ்ச் துணை கமிஷனர் செல்வகுமார்

கடமையும் அர்ப்பணிப்பு உணர்வும் காவல் துறையில் சிறப்பாகப் பணியாற்றும் அதிகாரிகள் பலரையும் நமது 'மித்ரா டைம்ஸ்' வாசகர்களுக்கு தொடர்ந்து அறிமுகம் செய்து வருகிறது.

அந்த வரிசையில் இம்முறை நாம் சந்திப்பது காவல்துறையின் மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவில், வடபழனி கிளையில் இணை ஆணையராகப் பணியாற்றும் திரு. செல்வகுமார் அவர்களை

வடபழனியில் அவர் காவல் ரோந்து ஏற்ற பின்னர் பெரும்பாலான குற்ற நிகழ்வுகள் இல்லாமல் போனதை சமூக ஆர்வலர்களும், பொது மக்களும் அனுபவப் பூர்வமாகப் பாராட்டினர். நமக்கும் அவரைச் சந்திக்கும் ஆர்வம் மிகுந்தது.

அதன் காரணமாகவே, அவரின் சிறப்பான செயல்பாடுகளை நமது வாசகர்கள் அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவரின் நேர்காணலுக்கு விண்ணப்பித்தோம்.

### தனித்துவமான காவல் அதிகாரி

பரபரப்பான தனது பொறுப்பான பணிகளுக்கிடையே நம்மை வரவேற்று உரையாடிய திரு.செல்வகுமார் காண்பதற்கு கடுமை மிக்கவராக காட்சி அளித்தாலும், அவருடைய அதிராத மென்மை ததும்பும் குரல் மக்களின் நண்பனாக அவர் விளங்கும் காரணத்தைப் புரிய வைத்தது.

எடுப்பான தோற்றம், மிடுக்கான நடை, கண்டிப்பும் கருணையும் கலந்து காட்சி தரும்

அவரின் சீரான செயல்பாடுகள் அவரின் வெற்றிகரமான தனித்துவத்துக்கு சிறந்த உதாரணங்கள். அவருடைய சிறப்பான குணங்களாக சென்னை வடபழனி குறிப்பிட்ட பல அம்சங்களை நாம் அவருடன் உரையாடுகையில், ஒவ்வொன்றாகக் கண்டு வியந்து கொண்டிருந்தோம் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

காவல்துறை அதிகாரியாக மட்டுமல்லாமல், காவல் துறைப் பணிக்கான பயிற்சிப் பள்ளியில் துணை முதல்வராக சென்னை – செயின்ட் தாமஸ் மவுண்டில் பணியாற்றிய பெருமையும் அவருக்குண்டு.

அங்கு பயிற்சி பெற்ற இளம் மாணவர்களுக்கு காவல் துறையினர் பெற வேண்டிய கட்டுப்பாட்டு நெறியை, அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ள வேண்டிய பணிப்பொறுப்புக்கான வழிகாட்டுதல் செயல்பாடுகளை, மிகச் சிறப்பாகச் சுட்டிக்காட்டி, காவல்துறையில் இன்று புகழ் பெற்று விளங்கும் பல கலங்கரை விளக்குகளை உருவாக்கிய புகழும் அவருக்குண்டு.

### சமூகப் பொறுப்புடனான செயல்பாடு

இதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, மிக எளிமையான பதிலை நமக்கு அவர் தந்தார்.

அப்படியெல்லாம் நான் பெரிதாக எதையும் செய்யவில்லை. அது எனக்குத் தரப்பட்ட பொறுப்பு. என் பொறுப்புகளை ஒரு சமூக சேவையாக, அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்ய வேண்டும் என்று எண்ணுவேன்.

அந்த சமூக நோக்குள்ள உணர்வைக் கொண்டதால்தான், சமூகவியல் படிப்பை ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் படித்தேன். அங்கு நான் கற்ற சூழல் தான், இன்று நான் பெற்றிருக்கும் நற்பண்புகளுக்கான அடித்தளமாக அமைந்தது என்கிறார்.

அத்தகைய சமூக உணர்வு சார்ந்த பொறுப் புணர்வு இன்று இவரை நகர காவல் துறையினர் நலம் சார்ந்த அமைப்புகளில் ஆலோசகராகவும், பங்களிப்பாளராகவும் பொறுப்பேற்க வரவேற்றுள்ளது.

### காவல் பணி விவரங்கள்

1996 – ம் ஆண்டில் காவல்துறையில் பணியில் சேர்ந்த செல்வகுமார் விழுப்புரத்தில் ஆய்வாளராக பொறுப்பேற்றார். அந்த காலகட்டத்தில் காவல் துறையில் டாக்டரேட் (DOCTORATE) பட்டம் பெற்றிருந்த சிலரில் இவரும் ஒருவர் என்பதும் முக்கியமானது.

கடுமையான பணிகளையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஏற்று செயலாற்றும் இவரின் தனித்துவம், 2005–ம் ஆண்டில் கிரைம் பிராஞ்ச் பிரிவிற்கு உயர்த்தியது. இதற்கு அடுத்துதான் காவல் துறை பயிற்சிப் பள்ளிக்கு துணை முதல்வராக செயின்ட் தாமஸ்மவுண்டில் இவர் நியமிக்கப்பட்டார்.

அப்பணிக் காலகட்டத்தைப் பற்றி இவர் குறிப்பிட்ட போது, நான் பயிற்சி மாணவர்களுக்கு செய்முறை அறிவை அவர்களுக்குக் கற்பிப்பதில் சிறப்பான கவனத்தை எடுத்துக் கொண்டேன். அதற்கேற்ப அவர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் கடுமையான உழைப்பு என்பது காவல்துறை பணியில் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து கொண்டனர்.

என்னிடம் அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் 220 பேர் இன்று தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பது எனக்கு மனதுக்கு மகிழ்வான ஒன்று என்று குறிப்பிடுகிறார் செல்வகுமார். அதைப்பற்றி மேலும் குறிப்பிட்ட அவர் இப்படி விளக்கினார்.

### ஆற்றல் மிகு வழிகாட்டல்கள்

என்னிடம் பயிற்சி பெற்றவர்களுக்கும், வழிகாட்டல் விழைபவர்களுக்கும் நான் சுட்டிக்காட்டி துறை சார்ந்து தெளிவுபடுத்துவது ஒன்றைத்தான்... இயல்பான எந்த ஒன்றையும் நம்முடைய அணுகுமுறையால் நாம் வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முடியும். முக்கியமாக இளந்தலைமுறை அறிந்துக் கொள்ள வேண்டிய நெறியும் இதுதான்.

சிறப்பான என்னுடைய எளிய அணுகு முறைகள் மிகவும் வலிமையான ஆற்றல் கொண்டவை. அதை என்னுடைய மாணவர்களுக்கு விளக்கி, இதைக் கடைப்பிடித்தால் நீங்கள் சிறந்த போலீசாக விளங்க முடியும் என உணர்த்துவேன்.

மாணவர்களுக்கான என்னுடைய நிரந்தரமான வழிகாட்டல் என்பது இதுதான். எப்பொழுதும் கடினமாக உழையுங்கள். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அதற்கு மாற்று என்பதோ, ஈடு இணை என்பதோ இல்லை என்பதை வலியுறுத்திக் கொண்டே இருப்பேன்.

இதை நினைவில் கொண்டு பொதுச் சேவையில் ஈடுபடுவோர் சேவை சார்ந்த உள்ளம் கொண்டவர்கள் ஆர்வம், ஆற்றல் மிக்கவர்களாக, செயல்பாட்டிலும் சீரான தன்மை கொண்டவர்களாக விளங்குவார்கள்.

சீருடையில் இருந்தாலும் காவல்துறையின் நண்பன் என்று மக்கள் எங்களைச் சந்திக்கலாம் என அன்புடன் குறிப்பிடுகிறார் சென்னை வடபழனி தெற்கு சிவன் கோவில் தெரு காவல் துறைக்குடியிருப்பில் வசிக்கும் திரு.செல்வகுமார்.

தொடர்புக்கு 9840967872

**– என்.ஜே.கே.மாறன்**



இயற்கை மருத்துவம்

# காசநோய் விரட்டும் தூதுவளை





தூதுவளை இலைகளை நிழலில் உலர்த்திக் காயவைத்து இடித்துப் பொடியாக்கி, ஒரு தேக்கரண்டி பொடியை ஒரு டம்ளர் பசும்பாலில் கலந்து தினமும் காலையில் மட்டும் குடித்து வர நாவறட்சி, கபநீர், மூட்டு வலி, காசநோய் குணமாகும். * தூதுவளை இலையை நெய்யில் வதக்கி துவையலாகவோ, கடைந்தோ உண்டு வரக் கபக் கட்டு நீங்கி உடல் பலம் பெறும். * தூதுவளை இலையைச் சாறு பிழிந்து அதேயளவு நெய்யில் காய்ச்சி ஒரு தேக்கரண்டியளவு 2 வேளை குடித்து வர, எலும்புருக்கிக் காசம், மார்புச் சளி உடனே நீங்கும்.* தூதுவளைக் காயை நிழலில் உலர்த்திக் காயவைத்து தயிர், உப்பு சேர்த்து பதப்படுத்தி எண்ணெயில் வறுத்து உணவுடன் உண்டு வர மனநலம் பாதிப்பு, இதய பலவீனம், மலச்சிக்கல் குணமாகும்.* தூதுவளைப் பூக்கள் 10 எடுத்து ஒரு டம்ளர் பாலில் காய்ச்சி வடிகட்டி, சிறிது சர்க்கரை சேர்த்து 48 நாட்கள் இருவேளை குடித்து வர, தாது விருத்தி, உடல் பலம், முகவசீகரம் பெறலாம்

# ரத்தக்கட்டு நீக்க எளிய வைத்தியம்!

சாதாரணக் காயம்தானே என்ற அலச்சியதால் நாம் கவனிக்காமல் விட்டுவிடும் சின்னக் காயங்கள்கூட சில நேரங்களில் மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

அந்த வகையில் 'ரத்தக்கட்டு ஏற்பட்டு அதனால் ஏற்படும் காயங்களை அலட்சியப்படுத்தினால், நாளடைவில் அந்த இடத்தில் ரத்த அழற்சி ஏற்பட்டு, கட்டிகளாக மாறிவிடும். பாதிக்கப்பட்ட பகுதியை அறுவைச் சிகிச்சை செய்து அகற்ற வேண்டிய நிலைகூட ஏற்படலாம்".

"உடல் உறுப்புகளில் அடி ஏற்படும்போது, தோலுக்கு அடியில் உள்ள மெல்லிய 'முடிவு ரத்த நாளங்கள்' மற்றும் தசை செல்களில் சிதைவு ஏற்படும். இதனால், தோல் பகுதியைக் கிழித்துக்கொண்டு ரத்தம் வெளியேற முடியாமல் தோலுக்கு உள்ளேயே தேங்கி நின்றுவிடும். இதைத்தான் ரத்தக்கட்டு என்கிறோம்.


முதலில் அடிபட்ட இடத்தில் ஐஸ் ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஆமணக்கு இலை, நொச்சி இலை இரண்டையும் சம அளவு எடுத்து, விளக்கெண்ணையில் வதக்கி, வெள்ளைத் துணியில் வைத்துக் கட்டி ஒத்தடம் கொடுக்கலாம். இதற்கு வீக்கத்தை உருக்கி ரத்தக்கட்டைப் போக்கும் தன்மை அதிகம்.

வெறும் விரலி மஞ்சளைப் பொடி செய்து, அரை டீஸ்பூன் பொடியினை ஒன்றரை கப் தண்ணீரில் கலந்து, இளஞ்சூடாக்கி ரத்தக்கட்டு உள்ள இடத்தின் மேல் பற்று போடலாம். மஞ்சளுக்கு ரத்தக்கட்டைக் குணமாக்கும் தன்மை உண்டு.

சித்த மருந்துக் கடைகளில் கிடைக்கும் அமுக்கிராங்கிழங்குச் சூரணத்தை வாங்கி, ஒரு கோப்பை பாலில் அரை டீஸ்பூன் கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் ஐந்து நாட்கள் குடித்து வர, ரத்தக்கட்டு கரைந்துவிடும். அமுக்கிராங் கிழங்குச் சூரண மாத்திரைகளும் சாப்பிடலாம்.

கருஞ்சீரகத்தைப் பொடிசெய்து அதில் கால் டீஸ்பூன் அளவு எடுத்து, ஒரு வெள்ளைத் துணியில் கட்டி,பொடி அரிசிக்கஞ்சியில் போட்டுவேகவைத்துக் குடிக்கலாம். ஆனால், கர்ப்பிணிகளோ, கருத்தரிக்கும் நேரத்தில் உள்ள பெண்களோ கருஞ் சீரகம் எடுத்துக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்".

– நிரோஷா திலிப்



எழுத்தாளர் சுஜாதா

# தோற்றுப் போ வெற்றி கிடைக்கும்!

தஞ்சையில் இருந்து, சென்னைக்கு பத்திரிகை பணிக்கு வந்தபோது நல்ல சம்பளம்தான். ஆனாலும் ஊதாரி. வீட்டுக்கு போன் போட்டு, ஏதாவது பொய் சொல்லி, "ரெண்டாயிரம் மணியார்டரில் அனுப்புங்கப்பா" என்பேன். (அப்போது நெட் பேங்க்கிங் கிடையாது)

அப்பாவும் உடனடியாக அனுப்பிவிடுவார். (சம்பளத்தைவிட அதிகமாக அப்பாவிடம் வாங்கியிருக்கிறேன்.)

மணியார்டரில் பணம் அனுப்பும்போது, அந்த ஃபாரத்தில் சில வரிகள் ஆங்கிலத்தில் எழுதி அனுப்புவார் அப்பா. (ஆங்கிலத்திலும் மிகப் புலமை பெற்றவர்) அதைக் கையால் எழுதாமல், யாரிடமாவது தட்டச்சு செய்து அனுப்புவார். அது அவரது வழக்கம்.

ஒவ்வொரு முறையும், "மை டியர் சன்.. (my dear son)" என்று ஆரம்பிக்கும் அந்த குறுங் கடிதம். ஒருமுறை மணிஆர்டர் வந்தபோது அதில் தட்டச்ச செய்யப்பட்டிருந்த வார்த்தையைப் பார்த்து அதிர்ந்தேன். மை டியர் சன் (my dear son) என்பதற்கு பதிலாக மை டியர் சின் ( my dear sin) என்று தட்டச்சியிருந்தது.ஆங்கிலத்தில் Sin என்றால் "பாவம்" என்று பொருள்.அப்பா வேண்டுமென்றே அப்படி தட்டச்சு செய்ய சொல்லியிருக்க மாட்டார். ஆனாலும் "சின்" என்ற வார்த்தை மனதை ஏதோ செய்தது. அந்த மணியார்டர் பணத்தை வாங்காமல் திருப்பி அனுப்பிவிட்டேன். அப்பாவுக்கு போய்ச் சேர்ந்தது பணம். அவருக்கு அதிர்ச்சி. உடனடியாக என் அலுவலகத்துக்கு தொலைபேசினார். "ஏம்பா பணம் திரும்பி வந்துருச்சு" என்றார் பதட்டமாக. அப்பாவிடம் எப்போதுமே வெளிப்படையாகவே பேசுவேன்: "மைடியர் சின் அப்படின்னு இருந்துச்சுப்பா அது சரிதானேன்னு தோணுச்சு அதான் " என்றேன். அப்பா சிரித்தார். நான் அவரை மிக கவனித்திருக்கிறேன். பெருந்துன்ப நேரங்களில் அவர் சிரிக்கவே செய்திருக்கிறார். அப்படியானதொரு துயரத்தை வெளிப்படுத்திய அந்த சிரிப்பை இனம் கண்டுகொண்டேன். அப்படியே போனை வைத்துவிட்டார் அப்பா. அப்போது நான் பணியாற்றியது, இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தில் இருந்து வந்துகொண்டிருந்த தமிழன் எக்ஸ்பிரஸ் இதழில். மறுநாள் காலை.. அலுவலகத்தில் இருந்த எனக்கு செக்யூரிட்டி யிடமிருந்து (இன்டர்காம்) அழைப்பு. என்னைப் பார்ப்பதற்கு அப்பா வந்திருப்பதாக தகவல் சொன்னார். இரண்டாவது மாடியிலிருந்து ஓடி வந்தேன். செக்யூரிட்டி அலுவலகத்தில் அப்பா அமர்ந்திருந்தார்.உள்ளுக்குள் ஏதோ செய்தாலும், சாதாரணமாக முகத்தை வைத்தபடி, "என்னப்பா திடீர்னு.." என்றேன். அப்பா என் தலையைவருடி, "தம்பி.. அப்பா உன்னை சின்.. அதான் பாவம்னு நினைப்பேனா..? உனக்கென்ன ராஜா நீதான என் சொத்துஞ் அந்த டைப்ரட்டிங்காரர் ஏதோ அவசரத்துல தப்பா டைப் அடிச்சுட்டார்.

இதுக்கெல்லாமா வருத்தப்படுறது? பணத்தை திருப்பி அனுப்பிட்டியே.. சிரமப்படுவேல்ல.. . அதான் கொடுக்க வந்தேன்" என்றார் அப்பா.முட்டிக்கொண்டு வந்த அழுகையை கட்டுப்படுத்திக்கொண்டு ஏதேதோ பேசினேன். யோசித்துப் பார்க்கையில் பிள்ளைகள் என்போர், பெற்றவர்களுக்கு "சின்" என்றுதான் தோன்றுகிறது. ஆனால், அப்பாக்கள் வரம். தாயிடம் நிரூபியுங்கள். கடைசி வரை அன்பாக இருப்பேன் என்று.தந்தையிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உங்கள் பெயரை காப்பாற்றுவேன் என்று. மனைவியிடம் நிரூபியுங்கள் கடைசி வரை என் காதல் உனக்கானது மட்டும் என்று. சகோதரனிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உனக்கு உறுதுணையாக இருப்பேன் என்று. சகோதரியிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உனக்கு செய்யும் சீர் ஒரு சுமையே இல்லை என்று மகனிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உலகமே எதிர்த்தாலும் நான் உன் பக்கம் என்று மகளிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் ரத்தம் வரும் என்று வேறு எவருக்கு நீங்கள் எதை நிரூபித்தாலும் அது கடலில் கொட்டிய பெருங்காயமே.

தோற்றுப் போனால்வெற்றி கிடைக்குமா? அம்மாவிடம் தோற்றுப் போ, அன்பு அதிகரிக்கும்.. அப்பாவிடம் தோற்று போ, அறிவு மேம்படும்..

துணையிடம் தொற்றப்போ, மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பிள்ளையிடம் தோற்றுப்போ, பாசம் மன்மடங்காகும். நண்பனிடம் தொற்றுப்போ, நட்பு உறுதிப்படும். ஆகவே தோற்றுப்போ தொற்று போனால் வெற்றி கிடைக்கும்.

... அன்புடன் வாழுங்கள்

– மும்மூர்த்தி



### மீனாட்சியம்மன் கோயில் லிங்கம்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் அமைந்துள்ள சிவலிங்கம்.



### லிங்கோத்பவர்

ராமநாதபுரம் மாவட்டம் உத்திரகோசமங்கை கோயிலில் லிங்கோத்பவராக காட்சிதரும் சிவபெருமான்.



### போஜ்பூர் சிவலிங்கம்

மத்தியப்பிரதேச மாநிலத்திலுள்ள போஜ்பூர் சிவன் கோயிலின் மிகப்பெரிய சிவலிங்கம்.



### பைஜ்நாத் சிவலிங்கம்

ஹிமாச்சல பிரதேசம் மாநிலத்தின் பாலம்பூர் பகுதியிலுள்ள பைஜ்நாத் சிவன் கோயிலில் அமைந்துள்ள இந்த சிவலிங்கம் இலங்கை வேந்தன் இராவணனால் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது.



### புசன்தேஸ்வரர்

ஒடிஸா மாநிலத்தின் மிகப்பெரிய லிங்கமாக கருதப்படும் புசன்தேஸ்வர கோயில் சிவலிங்கம்.



### மஹாதேவ் லிங்கம்

மகாராஷ்டிர மாநிலம் புனேவில் உள்ள மஹாதேவ் ஆலய சிவலிங்கம்.

99 DELIGHTS

Dream your Reality, Secure your future!

Appreciating deal Don't miss!! Don't feel!!

Exciting offers for first 5 booking Grab the deal...

ARE YOU THAT LUCKY PERSON?

WE WELCOME YOU

SEASON GREETINGS

## NEXT ANNA NAGAR

CMDA APPROVED

Per. Sq.Ft
**Rs. 5800/-**




## Location Advantages:

- 3 Minutes from Satellite Bus Terminal (A.P)
- 2 Minutes from Reliance Mart
- 8 Minutes from Anna Nagar
- 5 Minutes from Saravana Stores
- 2 Minutes from Vijaya Park Hotel
- 7 Minutes from Perambur Railway Station
- 10 Minutes from CMBT Terminal
- 25 Minutes from International Airport
- 20 Minutes from Central Railway Station
- Well connected by metro network for future commutation
- 30 Minutes from OMR
- 5 Minutes from Ambattur IT park

WORLD CLASS AMENITIES



JUST FEW MINUTES FROM MERIDIAN HOSPITAL

## A TOWERING LIFE STYLE

**9 FLOORS | 99 UNITS**

**2,3 BHK | 963-1469 Sq.Ft**

READY TO OCCUPY

RENTAL INCOME GUARANTEE

For booking Call:

# 8080-10-9999

Approved by Major Banks | ICICI Bank | HDFC | LIC HFL | AXIS BANK | LIC HFL

**Beat our price and get an i-phone absolutely free***

Channel Partners: Do you want to make money? Contact ______________________

KRM

No.1. Jawaharlal Nehru Road, (200 Ft. Inner Ring Road), Ponniamman Medu, Kolathur, Chennai - 600 099.
E-mail: sales@mitrahomemakers.com
www.krmhomemakers.com

**10ஆம் நூற்றாண்டில் ஹொய்சாள மன்னர்களால் 3 தலைமுறைகளாக 100 ஆண்டுகள் கஷ்டப்பட்டு பல இன்னல்களை சந்தித்து கர்நாடகாவில் ஹெலபேடு என்ற இடத்தில் கட்டப்பட்ட கோயில். ஒவ்வொரு கல்லிலும் ஓராயிரம் சிற்பங்கள். மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்ட கலைநயமிக்க ஒரு வரலாற்று பொக்கிஷம்**











Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue,9,Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.

திருக்கழுக்குன்றம் கயிலைப்புனிதர், திருவாசகமெனும் தேனை அனைவரையும் சுவைக்க வைக்கும்

# சிவ.தாமோதரன் ஐயா

அவர்களின் அருளாசியோடு கடவுளைக் காண கயிலைக்கு வாருங்கள்

## இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணத்தில்

# கைலாஷ்-மானஸரோவர் முக்திநாத் யாத்திரை-2019



ஆன்மீக அதிசய அற்புதங்கள் நிகழ்ந்த, தெய்வங்கள் வாழ்கின்ற திருக்கயிலையில் **நடையிடுங்கள்!**

மானஸரோவர் புனித நீரில் மூழ்கியெழும் பேறுபெற்று தெய்வீக மர்மங்கள் நிறைந்த அவ்விடத்தில் **தியானியுங்கள்!**

கயிலாயத்தின் சூட்சம அதிர்வுகளையும், கயிலாயத்தின் ரகசியங்களையும் **உணர்ந்திடுங்கள்!!!**

**சிவசெல்வர்களே,** மனிதனாகப் பிறந்த நம் அனைவருக்கும் இறைவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் மனதின் அடியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அந்த இறைவனாகிய எம்பெருமான் சிவனையும் பார்வதி தேவியையும் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கயிலையில் நேரில் தரிசித்து எல்லையில்லாப் பேரின்ப நிலை அடையவும், மேலும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவர் தடாகத்தில் சிவபூஜைக்குபின் திருமுறைகள் முழங்க, கயிலாய வாத்தியங்கள் இசைக்க, சங்கு நாதம் ஒலிக்க, தமிழ் வேதங்களுடன், அடியார்கள் ஆனந்த நடனமாடிட, சகல பரிவாரங்களும் அசைந்து வர, வரலாறு பதிவு செய்யும் விதமாக அடியார்கள் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் இந்துக்களின் இறைநெறியான திருவாசகம் முற்றோதலுடன் கூடிய இந்த யாத்திரையின் மூலம் எழுச்சி மிக்க அபரிதமான ஆயுளை நீடிக்கச் செய்யும் சகல சக்திகளும் நிறைந்த பிரபஞ்ச சக்தியை நீங்கள் நேரில் பெறவும், மகிமைகொண்ட பிரபஞ்ச தெய்வீக நடனமான (Cosmic Dance) சிவதாண்டவத்தை நேரில் தரிசிக்கவும் ஓர் அரிய வாய்ப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஏப்ரல் 19**<br>சித்ரா பௌர்ணமி/ புத்த பூர்ணிமா | **மே 18**<br>வைகாசி பௌர்ணமி | **ஜுன் 17**<br>ஆனி பௌர்ணமி | **ஜுலை 16**<br>ஜுலை மாத பௌர்ணமி | **ஆக.15**<br>ஆடி பௌர்ணமி | **செப்.13**<br>சிவ-பார்வதி திருக்கல்யாண சிறப்பு பெருவிழா யாத்திரை |

அனைத்தையும் குணமளிக்கும் சக்தி நிறைந்த மானஸரோவர் தடாகத்தில் புனித நீராடி தெய்வீக அதிசயங்களை காணவும் கிரிவலம் சென்று கயிலைநாதனை முழுமையாக தரிசிக்கவும், நமக்குள்ளே இருக்கும் பிரபஞ்சம் தூண்டப்படவும், ஆற்றல் மிக்க பாசிடிவ் காஸ்மிக் எனர்ஜி நம்முள் பிரவேசித்து பிரதிபலிப்பதை நிதர்சனமாக உணர்ந்து தெய்வீக பேரின்ப நிலையை அடையவும் யோகா மற்றும் பிராணாயாமம் போன்ற சிறப்பு பயிற்சிகளை முறையாக அளித்து யாத்திரை முழுவதும் நாங்களே உடன் இருந்து தகுந்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்வது இந்தியாவிலேயே யாத்திரையில் 20 வருடம் அனுபவம் கொண்ட நாங்கள் மட்டுமே

ஸ்ரீராமானுஜரின் 1002வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு அடியார்களின் உபன்யாசம், வைணவ சம்பிரதாயத்துடன் கூடிய

## நேபாள்-ஸ்ரீசாளகிராம-முக்திநாத் யாத்திரை

சீனா, திபெத், நேபாள் டூரிஸம் போர்டில் பெர்மிட் மற்றும் விசாவை நேரடியாக பெறுவதால் இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் கைலாஷ்-மானஸரோவர்-முக்திநாத் யாத்திரைக்கு அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே

சிவனடியார்களின் பொருளாதார வசதிகளைக் கருத்தில்கொண்டு குறைந்த கட்டணத்தில் ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்மண்டு வரை தொடர்ந்து அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே

*சிவனின் வாசஸ்தலத்தை தரிசிப்பதன் மூலம் காணக்கிடைக்காத பல அற்புதங்களை தாங்கள் காணப் போகிறீர்கள். தங்களின் உள்ளத்தையும், உணர்வுகளையும் உயர்த்தி மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயரப் போகிறீர்கள். நூறு பிறவியின் பெரும்பயனை அடையப் போகிறீர்கள்*

**தாங்கள் தெய்வீக புதிராக நிற்கும் கயிலை மலையானை தொட்டு ஸ்பரிசித்து மெய்சிலிர்க்க வைக்கும் பேரின்பநிலை, யோகநிலை அடைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

GET ₹ 40,000 SUBSIDY FROM TN GOVT. FOR KAILASH YATRA

#1 yatra

கடந்த 20 ஆண்டுகளாக சுமார் 7000 சிவனடியார்களை கயிலைநாதனையும், முக்திநாதனையும் நேரில் கண்டு தரிசிக்க அழைத்து சென்ற ஒரே நிறுவனம்

## ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

sapyservice@gmail.com | www.annapooraniyatra.com

GET ₹ 10,000 SUBSIDY FROM TN GOVT. FOR MUKTHINATH

63, NADU STREET, MYLAPORE, CHENNAI-4 ✆8056 333 333, 8056 444 444

எங்களின் பயண திட்டம், பயண நாட்கள் மற்றும் கட்டணத்தை மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிட்டு பாருங்கள். பதிவு கட்டணம் ரூ. 5,000 மட்டுமே

SPECIAL CARE FOR SENIOR CITIZENS
PASSPORT WILL BE ARRANGED

திபெத், நேபாள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
INDIAN PILGRIMAGE SERVICE CENTRE OF TAR
Association of Kailash Tour Operators Nepal

**சிவ-பார்வதி உறைந்திருக்கும் தெய்வ உலகம் திருக்கயிலையில்**

இறைவனை நீங்கள் **பார்க்கலாம்!** இறைவன் பேசுவதை நீங்கள் **கேட்கலாம்!**
இறைவனோடு நீங்கள் **பேசலாம்!** இறைவன் நடத்தும் அற்புதங்களை நீங்கள் **உணரலாம்!**


"Use Nature Plates"
" Save Water "
GK Enterprises
பாக்கு மட்டை தட்டுகளை பயன்படுத்துவோம்.
(GK)
சுற்றுபுற சூழலை பாதுகாப்போம்.
தங்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகள் திருமணம், விருந்து, உணவகம் மற்றும் கோயில் அன்னதானம் போன்ற நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதற்கு இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்படும் தரமான பல்வேறு வடிவம் கொண்ட பெரிய மற்றும் சிறிய அளவிலான பாக்கு மட்டை தட்டுகள் மற்றும் கப்புகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் மிகக்குறைந்த விலையில் எங்களிடம் கிடைக்கும்.
உற்பத்தி மற்றும் பயிற்சி மையம்:
எண்: 45, அசோக் நகர்-II, காந்திநகர் அஞ்சல்,
NLC-ஆர்ச் Opp, நெய்வேலி நகரம்-607 308.
செல்: 9585068246, 8072112764.
E.Mail: gkenterprises.org@gmail.com,
Website: gkenterprises.net.in